பக்கங்கள் எட்டு
விலை ரூபா: 5.00

# வலம்புரி
VALAMPURI

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 ஐப்பசி 28 திங்கட்கிழமை (13-11-2000) தொ. பேசி 3378 ஒலி: 329

லாலாசோப்
சன்சயின் சோப்
ஏக விநியோகஸ்தர்
வேணி களஞ்சியம்
கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்.
லாலாசோப் அச்சுவேலி (985)

★ மாவீரர்வாரத்தை மையமாகவைத்து

# கட்டளை தளபதிகளின் இடமாற்றம்

# வடபகுதியுத்தத்தை தீவிரப்படுத்தும்

## இராணுவ ஆய்வாளர்கள் கருத்து

(நமது நிருபர்)

இராணுவ உயர்பீடத்தில் திடீர்மாற்றங்களை மேற்கொள்வதற்கு அரசு முடிவு செய்துள்ளது. அடுத்த வாரமளவில் நிகழவுள்ள உயர் இராணுவ கட்டமைப்பில் இடம்பெறவுள்ள மாற்றங்களின் போது மேஜர்ஜெனரல் தர அதிகாரிகள் மூவர் இடமாற்றம் பெறவுள்ளனர் இராணுவ உயர் பீடத்தில் நிகழவுள்ள இந்த மாற்றங்கள் பாதுகாப்பு அமைச்சுக்குப் பொறுப்பாகவுள்ள ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது-

எதிர்வரும் மாவீரர் வாரத்திற்குமுன்பு வடக்குக்கிழக்கில் பாரியஇராணுவநடவடிக்கை ஒன்றினை மேற்கொள்ளும் வகையில் இராணுவ உயர் பீட கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தி அதனை நடைமுறைப் படுத்துவதற்கு அரசு முடிவுசெய்துள்ளது.

பிரதிப்பாதுகாப்புஅமைச்சு இன்னாருக்கு என்று ஒதுக்கப்படாத நிலையில், மேற்கொள்ளப்படவுள்ள உயர் இராணுவ இடமாற்றங்களும்

(8 ஆம்பக்கம் பார்க்க)

## ஐந்து பிரதி அமைச்சர்கள் மேலும் நியமனம்

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணி அமைச்சரவையில் மேலும் ஐந்து பிரதி அமைச்சர்கள் விரைவில் நியமிக்கப் படவுள்ளனர் என அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முன்னாள் பிரதி அமைச்சர்களாக இருந்த டிலான் பெரேரா, பாலித லஷ்மன் பிரேமச்சந்திரா, ஜீ. எல். பீரிஸ், எஸ்.பி திஸநாயக்கா, பந்துல குணவர்த்தனா ஆகியோர் மீண்டும் பிரதி அமைச்சர்களாக நியமிக்கப் படலாம் என மேலும் தெரியவந்துளது.

தற்போது 35 பிரதி அமைச்சர்கள் உள்ளனர் இவ்ஐந்து பிரதி அமைச்சர்களும் நியமிக்கப்பட்ட பின் பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கை 40 ஆக அதிகரிக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ)

## யுத்த நிறுத்தம் செய்வதற்கு ஒரு போதும் இணங்கமாட்டேன்

### இராணுவத் தளபதி அறிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் அரசு பேசுவதற்காக யுத்த நிறுத்தம் செய்ய ஒருபோதும் நான் இணங்க மாட்டேன் இவ்வாறு இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் பல்லேகல தெரிவித்துள்ளார்.

நேற்று வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் மத்தியில்

(8ஆம் பக்கம்பார்க்க)

மலையக இளைஞர்களின் கைது

## சந்திரசேகரன் எம்.பி பிரதமரை சந்திப்பார்!

(கொழும்பு)

மலையகத்தில் தொடர்ந்தும் தமிழ் இளைஞர்கள் அனாவசியமாகக் கைதுசெய்யப்படுவதை அடுத்து, மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரனும், ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி பி.பி. தேவராஜும் அப்பகுதியின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரைச் சந்தித்துப் பேசியுள்ளனர்.

இவர்களின் கைதுகள் தொடர்பாக இன்று பிரதமர் ரட்ண சிறி விக்கிரமநாயக்கா

(8 ஆம்பக்கம் பார்க்க)

## அமைச்சர் டக்ளஸ் விரைவில்வவுனியா விஜயம்

(வவுனியா)

வடபகுதி புனர்வாழ்வு புனரமைப்புவடக்குக்கிழக்கு தமிழ் விவகாரம் இந்து கலாச்சார அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா வெகுவிரைவில் வவுனியாவுக்கு விஜயம்செய்யவுள்ளதாகவவுனியாமாவட்ட ஈ.பி.டி.பி அமைப்பாளர் சிவகுமார் தெரிவித்துள்ளார்.

வவுனியாவுக்கு விஜயம் செய்யவுள்ள அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா வவுனியாவில்இடம் பெயர்ந்தோர் தங்கியுள்ளநலன்புரிமுகாம்களுக்கும் விஜயம்செய்துஅங்கு நிலவும் குறைபாடுகள் சம்பந்தமாக கேட்டு அறிந்துகொள்ளவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளார். (வ)

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண

## அரசும்புலிகளும் பேசவேண்டும் ஐரோப்பிய ஒன்றியம் வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்கு நிரந்தரச் சமாதானத் தீர்வொன்றைக்காண்பதற்கு அரசும் விடுதலைப்புலிகளும் பேச்சுநடத்தவேண்டுமென ஐரோப்பிய ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம், ''ப்றீசலில்'' இருந்து விடுத்துள்ள இக்கோரிக்கையில் நோர்வேயின் விஷேட தூதுவர் எரிக்சோல்ஹெமுக்கும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்குமிடையே வன்னியில் நடைபெற்ற பேச்சுவார்த்தையானது தமிழ். சிங்கள மக்களிடையே நல்லுறவை ஏற்படுத்தக் கூடியது.

கடந்த இருபது வருடங்களுக்குமேலாக இலங்கை மக்களுக்கு சொல்லொணாத் துயரங்களை ஏற்படுத்தி வரும் இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரும் பேச்சுவார்த்தையை ஐரோப்பிய ஒன்றியம் ஊக்குவிக்கிறது

இந்தப்பேச்சுக்களானது சிறுபான்மைத் தமிழினத்தின் மதம், மற்றும் கலாசாரப் பாரம்பரியங்களுக்கு மதிப்பளிப்பதாகவும், அவர்களது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதாகவும் இருக்கவேண்டுமென அக் கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ

பண்டாரவளைப் படுகொலை

## பாரபட்சமற்ற விசாரணை வேண்டும் ஐ.நா. சபைக்கு கையெழுத்து மகஜர்

(கொழும்பு)

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டதை கண்டித்தும், அச்சம்பவத்துக்கு பாரபட்சமற்ற முறையில் விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்பதை வலியுறுத்தியும் ஐக்கியநாடுகள் சபைக்கு மகஜரொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கோபி அனானுக்கு முகவரியிடப்பட்ட மேற்படி மகஜரில் திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த 15 ஆயிரம்பேர் கையொப்பமிட்டுள்ளனர்.

திருகோணமலையிலுள்ள ஐக்கியநாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தில் நேற்றுப் பிற்பகல் இம்மகஜர் கையளிக்கப்பட்டது. (ந-2-5)

## மட்டக்களப்பில் இன்று துக்கம் அனுஷ்டிப்பு

(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நிமலநாயகம் சௌந்தரநாயகம் சுட்டுக் கொலைசெய்யப்பட்டமைக்கு அனுதாபம் தெரிவித்து இன்று மட்டக்களப்பில் பூரண துக்கம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

மட்டக்களப்பு பொது மக்கள் அமைப்பினர், இத்துக்கதினம் தொடர்பாக துண்டுப் பிரசுரம் ஒன்றையும் வெளியிட்டுள்ளனர்.

அத்துண்டுப் பிரசுரத்தில் வர்த்தக நிலையங்களை பூட்டியும், பாடசாலைகளைப் பகிஷ்கரித்தும், போக்குவரத்துச்சேவைகள் எதுவும் நடைபெறாமலும் இருக்கவேண்டுமென்றும் அத்துண்டுப் பிரசுரத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. [வ]

## புத்தூரில் ஒருவர் உயிரிழப்பு

புத்தூர் கிழக்குப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை விடுதலைப் புலிகளுக்கும்

(8ம் பக்கம் பார்க்க)

## மலையக வன்செயலால் 10 கோடி ரூபா நட்டம்

(கொழும்பு)

தலவாக்கல கினிகெத்தென ஆகிய மலையக நகரங்களில் இடம்பெற்ற வன்செயல்களினால் கடைகள் எரிக்கப்பட்டு பொருட்கள் சூறையாடப் பட்டதில் சுமார்பத்துக்கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவத்தின்போது தலவாக்கலையில் 16 கடைகள் எரிக்கப்பட்டுள்ளன சிங்களவரின்பத்துக் கடைகள்உட்பட 47 கடைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

நூற்றுப்பதினைந்து குடும்பங்களைச்சேர்ந்த 415 பேர்இந்த வன்முறையில்பாதிக்கப்பட்டுள்ளனர் இவர்களில் 59 பாடசாலைமாணவர்களும்16சிறுவர்களும்அடங்குவர்.

இவ் வன்செயலால் சுமார் பத்துக் கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (ஸ்ரீ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

### நிறைகுறைந்த பாணை

# உற்பத்தி செய்யும் பேக்கரிகளுக்கு

# மா விநியோகம் செய்யவேண்டாம்

## யாழ். மேலதிக அரச அதிபர் அறிவிப்பு

(மந்திகை)

வடமராட்சிப் பகுதியில் 450 கிராமுக்கு குறைந்த நிறையுடைய பாணை உற்பத்தி செய்யும் பேக்கரிகளுக்கு மா வழங்க வேண்டாமென, யாழ். மேலதிக அரசாங்க அதிபர் சு. வைத்திலிங்கம் சம்பந்தப்பட்ட சங்கங்களுக்கு அறிவித்துள்ளார்.

இப் பிரதேசத்தில் பெரும்பாலான பேக்கரிகள் 450 கிராமிலும் குறைந்த நிறையுடைய பாணை உற்பத்தி செய்வதாக பொதுமக்களால் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கட்டைவேலி நெல்லியடி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் மாவினைப் பெற்று வந்த பேக்கரிகளுக்கு மா விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பேக்கரி உரிமையாளர்களின் இவ்வாறான பொறுப்பற்ற தன்மை பொது மக்களைப் பெரிதும் பாதித்துள்ளதாக சமூக நலன்விரும்பிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர். (செ-23)

### யாழ். வைத்தியசாலையில்

## நோயாளரை பார்வையிட வருவோர் பெரும் அவதி

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தியசாலையில் தங்கியுள்ள நோயாளரைப் பார்வையிடவருவோர்பெரும் இன்னல்களை எதிர் நோக்கி வருவதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

கடுமவெய்யிலிலும் மழையிலும் இவர்கள் துன்பப்பட வேண்டியஅவலநிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதுவிடயத்தில் ஆஸ்பத்திரி நிர்வாகம் பாரா முகமாக இருந்து வருவதாக வும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது மழைக்காலம் ஆரம்பமாகியுள்ளதை அடுத்து பெரும் அவல நிலை எதிர் நோக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-12)

## தரகர்களின் தலையீடின்றி பயணச் சீட்டு பெறலாம்

### உயர் அதிகாரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இடைத் தரகர்களின் தலையீடு இன்றி பயணச் சீட்டுக்கள் வழங்கப்படும் என்று வடமாகாண மீள் குடியமர்வு புனர்வாழ்வு அதிகார சபையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவும் காலநிலை காரணமாக இடை நிறுத்தப்பட்டுள்ள கப்பல் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படும் தினத்தன்று மேற்படி அலுவலகத்தினர் பயணச் சீட்டுக் கள் வழங்கும் பணியை ஆரம்பிக்கவுள்ளனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பணிகளை மேற்கொள்வதற்கான ஆயத்த வேலைகள் யாவும் முடிவடையும் நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-3-12)

## போதைப் பாவனையாளர் கதிர்காமத்தை முற்றுகை

(கொழும்பு)

கதிர்காமத்தின் புனிதத்தன்மைக்கு களங்கம் ஏற்படும் விதத்தில் அப்பகுதியில் வீணர்களின் அட்டகாசம் அதிகரித்து வருவதாக பொதுமக்களும் அங்கு செல்லும் யாத்திரிகர்களும் கவலை தெரிவித்துள்ளனர்.

போதைப்பொருள் பாவனையாளர்கள், மற்றும் விற்பனையாளர்கள் இவ்விடத்தை தெரிவுசெய்துதமது தகாத செயல்களை நடைமுறைப்படுத்தும் இடமாக பாவிப்பதுடன், திருட்டுத்தனங்களும் இங்கு மலிந்து காணப்படுகிறது.

குறிப்பாக கதிர்காமப்பகுதியில் சிறுவர்களும், இளைஞர்களுமே திருட்டுக்களிலும், போதைப் பொருட் பாவனையிலும் முன்னணி வகிப்பது குறிப்பிடத்தக்கது.

இதேசமயம்,

கதிர்காமப் பகுதியில்நடைமுறையில் இருக்கும் சீரற்ற மின் விநியோகமே இவ்வாறான பாதகச் செயல்கள் அங்குநிலைகொள்ள காலாய் அமைந்து விடுவதாக யாத்திரிகர்கள் பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர். [உ]

## பிரிவுத்துயர் பகிர்வு

### திரு. யோசப் குமாரதாஸ்

(Retd Supt Engineer)

யாழ்ப்பாணம் வதிரியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட J. குமாரதாஸ் 09.11 2000அன்று கனடாவில் காலமானார்.

இறுதிக் கிரியைகள் இன்று கனடாவில் நடைபெறும்.

தகவல் : J. சத்தியதாஸ்

### திருமதி சந்திரரதி கணேசன் (ரதி)

பல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வதிவிடமாகவும கொண்ட சந்திரரதி கணேசன் 09.11.2000 அன்று அமெரிக்காவில் காலமானார்.

தகனக் கிரியைகள் 'கொனற்றிகற்றில்' இன்று நடைபெறுகிறது.

தகவல் : திருமதி ந. ஞானலிங்கம்

### கந்தர் முருகேசு

மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த கந்தர் முருகேசு அவர்கள் கடந்த வெள்ளிக் கிழமை 10.11.2000 புதுக்குடியிருப்பில் காலமாகி விட்டார்.

அன்னாரின் பூதவுடல் சனிக்கிழமை 11.11.2000 புதுக்குடியிருப்பில தகனம் செய்யப்பட்டது.

தகவல் : மு. பரமசாமி (மகன்)

புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.

### திருமதி அந்தோனிப்பிள்ளை எலிசபெத்

இளவாலையைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட எலிசபெத் அந்தோனிப்பிள்ளை 09 11.2000 அன்று காலமானார்.

ஈமைக் கிரியைகள் இன்று நடைபெறும்.

தகவல் : A. P. இராசநாயகம்

### வடமராட்சிப் பகுதியில்

## புகையிலைச் செய்கையில் விவசாயிகள் அதிகஆர்வம்

(கல்வயல்)

வடமராட்சிப் பகுதியில், புகையிலைச் செய்கையில் என்றுமில்லாதவகையில் இம்முறை மக்கள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தற்பொழுது புகையிலை நாற்று மேடைகள் அமைத்தல், மற்றும் புகையிலைக் கன்றுகளை தோட்டத்தில் நடுதல், நடுவதற்கேற்ற வகையில் நிலத்தைப் பக்குவப்படுத்தல் என புகையிலைச் செய்கையில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

அதிக மழையின்றி, புகையிலைச் செய்கைக்கு ஏற்ற காலநிலை நிலவுவதாலும், புகையிலையினை கொழும்புக்கு ஏற்றி விற்பனை செய்யக் கூடிய சந்தை வாய்ப்பு கிட்டியுள்ளதாலுமே புகையிலைச் செய்கையில் விவசாயிகள் நாட்டம் காட்டி வருவது குறிப்பிடத்தக்கது. (உ-111)

### வலி. மேற்கில்

## இடம் பெயர்ந்தோருக்கு விரைவில் 2 ஆயிரம் ரூபா

(வட்டுக்கோட்டை)

இடம்பெயர்ந்து வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் வசிப்பவர்களில் ஒரு தொகுதியினருக்கு இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

ஜே 173, ஜே 175, ஜே 177, ஜே 178, ஜே 180, ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் வசிப்பவர்களுக்கு எதிர்வரும் 15 ஆம் திகதி புதன் கிழமையும் ஜே 174, ஜே 176, ஜே 179, ஜே 181, ஆகியகிராம சேவகர் பிரிவுகளில் வசிப்பவர்களுக்கு எதிர் வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமையும் இக்கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளது.

இக்கொடுப்பனவுகள் பி.ப 2.00 மணி தொடக்கம் சங்கானை மக்கள் வங்கியில் வைத்து வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (செ-24)

## நாவலர் ஆச்சிரமத்தில் நூலகசேவை ஆரம்பம்

### தேர்வு நாடிகளின் வசதிகருதியாம்

(நல்லூர்)

வண்ணை–நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நூலக சேவைஆரம்பிக்கப்பட்டுள்ளது.

''சைவசித்தாந்த பிரவேச பாலபண்டித; பண்டிதர் தேர்வுகளுக்குத் தோற்றுபவர்களின் நன்மை கருதி, பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாட நூல்கள் இந் நூலகத்தில் வைக்கப்பெற்றுள்ளன.

அத்துடன் மேற்படி பரீட்சையின் கடந்த கால வினாத்தாள்களும் நூலகத்தில் உள்ளது.

மேற்படி நூலகம் காலை 9.00 மணிதொடக்கம் பி. ப 1.00 மணி வரை திறந்திருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (செ-103)

## தென்மராட்சியில் திருட்டு வடமராட்சியில் விற்பனை

(மந்திகை)

தென்மராட்சியின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து ஆட்கள இல்லாத வீடுகளில் திருடப்பட்ட பொருட்கள் துன்னாலைப் பகுதியில் வைத்து விற்பனை செய்யப்படுவதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு விற்பனை செய்யப்படும் பொருட்களில் நெல்லு மூடைகள், தேங்காய்கள். வீட்டுத் தளபாடங்கள் விற்பனை செய்யப்படுகின்றது.

தென்மராட்சியிலிருந்து இடம் பெயர்ந்து இத்திருட்டு விற்பனையில் ஈடுபடுபவர்களுக்கு துன்னாலைப் பகுதி மக்களும் உடந்தையாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது பற்றி வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைத் தலைவர் வல்லிபுரம் நடராஜாவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அவர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (செ-23)

## வவுனியா வைத்தியசாலை தரமுயர்த்தப்படவுள்ளது

(வவுனியா)

வவுனியா ஆதாரவைத்தியசாலை வெகுவிரைவில் பொது வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்படவுள்ளது.

ஒவ்வொருமாவட்டத்திலும் ஒரு பொது வைத்தியசாலை அமைய வேண்டுமென்ற ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கமைவாக வவுனியா வைத்தியசாலை ''பொது'' வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்படவுள்ளதென வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் இ. இரகுநாதபிள்ளை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலக சுகாதார செயலணிக் குழுவிற்குப் பொறுப்பான சிறிஸ் டிசில்வா சுகாதார அமைச்சின்பணிப்பாளர் டாக்டர் திருமதி சறோஜினி மாணிக்கராசா சுகாதார அமைச்சின் செயலாளர் ரி. இரட்ணாயக்கா ஆகியோரின் செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடல் ஒன்றை மேற் கொண்டிருந்தனர். (வ)

## கண்டெடுப்பு

(மந்திகை)

திறப்புக் கோர்வை, உணவுப் பொருட்கள் அடங்கிய பொதி ஒன்று நெல்லியடிப் பகுதியில்கண்டெடுக்கப்பட்டு சாவகச்சேரி வணிகர் மன்றத்தில்ஒப்படைக்கப்பட்டுள்ளது

உரியவர்கள் நெல்லியடி', கொடிகாமம் வீதியில் இயங்கும் சாவகச்சேரி வணிகர் மன்றத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம் என வணிகர் மன்றத்தினர் தெரிவித்துள்ளனர் [செ-23]

## தென்னங்கன்று விநியோகம்

(மண்டைதீவு)

வேலணை பிரதேச சபைஎல்லைக்குட்பட்ட பகுதி மக்களுக்கு மேற்படி பிரதேச சபையின் உப அலுவலகங்கள் ஊடாக தென்னங்கன்று விநியோகிக்கப்படவிருப்பதாக பிரதேச சபைத்தலைவர் என். கருணாகரமூர்த்தி தெரிவித்துள்ளார். (உ-11)

## காவலரண் மீது தாக்கு

(ஏறாவூர்)

ஏறாவூர் பொலிஸ் நிலையத்தின் வடக்கே அமைந்துள்ள காவலரண் மீது, புலிகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 7.30 மணியளவில் நடத்திய ஆர்.பி.ஜீ. தாக்குதல் முறியடிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புலிகளின் தாக்குதலையடுத்து பொலிஸார் மேற்கொண்ட பதில் தாக்குதலின் பின்னர் புலிகள் பின்வாங்கிச் சென்று விட்டதாக மேலும் தெரிவித்துள்ளனர்.

புலிகளின் தாக்குதலில், பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் காயமடைந்து ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-108)

**8,9, ஆம் திகதிகளில் வெளியான வர்த்தகமும் கணக்கியலும் - 1 ற்கான விடைகள் கீழே தரப்படுகின்றது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01) | 4 | 02) | 3 | 03) | 1 |
| 04) | 1 | 05) | 2 | 06) | 2 |
| 07) | 3 | 08) | 2 | 09) | 1 |
| 10) | 2 | 11) | 3 | 12) | 3 |
| 13) | 2 | 14) | 1 | 15) | 1 |
| 16) | 4 | 17) | 2 | 18) | 2 |
| 19) | 2 | 20) | 1 | 21) | 4 |
| 22) | 2 | 23) | 3 | 24) | 3 |
| 25) | 2 | 26) | 1 | 27) | 2 |
| 28) | 2 | 29) | 1 | 30) | 4 |
| 31) | 2 | 32) | 2 | 33) | 1 |
| 33) | 1 | 34) | 1 | 35) | 2 |
| 36) | 1 | 37) | 1 | 38) | 2 |
| 39) | 2 | 40) | 2 | | |

# செய்தித் துளிகள்

## ஒன்பது நாள் கணனிப் பயிற்சி

(அரியாலை)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஏற்பாட்டில் 9 நாள கணனிப் பயிற்சி நடைபெறவுள்ளது.

கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் மற்றும்மாணவர்களை உள்ளடக்கி இக் கணனிப் பயிற்சிஏற்பாடுசெய்யப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்சது.

வேகமாக மாறிவரும் தகவல் புரட்சி யுகத்திலே கணனி பற்றிய அறிவை அனைவரும் விருத்தி செய்து கொள்ள வேண்டியதன் அவசியம் கருதியே இப்பயிற்சிநெறி ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாக சம்பந்தப்பட்ட கல்வியியற் கல்லூரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(உ - 106)

## மருத்துவ விடுதியில்

(கல்வயல்)

மந்திகை ஆதார வைத்திய சாலையில் புதிதாக அமைக்கப்பட்ட வைத்திய அதிகாரி விடுதியிலும் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

தென்மராட்சியின் கிழக்குப்பகுதிகளில் நிலவும் போர் நிலவரம் காரணமாக அண்மையில் இடம்பெயர்ந்த மக்களே இவ்வாறு தங்கியுள்ளனர்.

(உ - 111)

## நிவாரணம் பெறுவதில் சிரமம்

(துன்னாலை)

கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளின் எல்லைப் பரப்பிற்குட்பட்ட மக்கள் இடம்பெயர்ந்த நிலையில் தாம் எங்கு இடம்பெயர்விற்கான நிவாரணம் பெற்றுக் கொள்வதென்று தெரியாத நிலையில் பெரிதும் இன்னலுறுகின்றனர்.

தென்மராட்சி இடம்பெயர்வையடுத்து மக்கள் பல்வேறு இடங்களிலும் சிதறி வாழ்வதில் இந்நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(க - 41)

## திரிபோஷா அனுப்பி வைப்பு

(ஈச்சமோட்டை)

யாழ். மாவட்டத்திற்கு திரிபோஷாமா அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேற்படி அமைச்சு மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கிணங்க 50.000 பைக்கட் திரிபோஷாமா 250.000ரூபா கப்பல் கட்டணம் செலுத்தி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

திரிபோஷாமா யாழ். மாவட்டத்திலுள்ள கர்ப்பிணித்தாய்மார்நிறைகுறைந்த பிள்ளைகள் போன்றோர் உட்கொண்டுவருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (க-59)

## அடிக்கல் நாட்டல்

(நல்லூர்)

திருநெல்வேலி-கத்தர்மடம் ஸ்ரீ சிவகுருநாத குருபீட வேதாந்த மடத்தின் கட்டிடப் புனருத்தாரண வேலைகளுக்காக கடந்த 9 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

ஸ்ரீமத் சோமஸ்கந்தவேள் சுவாமிகள் தலைமையில் நடந்த இந் நிகழ்வில் ஆன்மீகத்துறை சார்ந்தவர்கள், கல்வித்துறை சார்ந்தவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(செ-103)

## இன்று பயிற்சி பட்டறை

(துன்னாலை)

கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் 'குழாய் நீர் விநியோகம்' பற்றிய பயிற்சிப் பட்டறைஇன்று திங்கட்கிழமைமு.ப9.30மணி தொடக்கம் பி.ப 4.30 மணி வரை நடத்தப்படுகின்றது.

இதற்கான ஒழுங்குகள் ஜி.ரி.சற். நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது என கரவெட்டி பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

(செ-41)

## பிரதி அமைச்சர் பதவி ஏற்பு

(கொழும்பு)

தேசிய நல்லிணக்க இன விவகார பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சோமசுந்தரம் கணேசமூர்த்தி கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள கிராமோதய மண்டபத்தில் தனது பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அங்குஇவர்உரையாற்றுகையில் நாட்டில் சமாதானம் ஏற்பட நல்ல வாய்ப்புகிட்டியுள்ளது.

இத்தருணத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியும்,ஐக்கிய தேசியகட்சியும்,ஏனையகட்சிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

## இளைஞன் மீது தாக்கு

(ஊர்காவற்றுறை)

இளைஞன் ஒருவன் கடற்படையினரால் தாக்கப்பட்ட சம்பவம் ஒன்று ஊர்காவற்றுறை பகுதியில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

ஊர்காவற்றுறை தனியார் வியாபாரியான மா. சதீசன் (வயது 21) என்பவரே தாக்கப்பட்டவராவார்

இச் சம்பவம் தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(க-75)

## குடிநீருக்கு தட்டுப்பாடு

(மந்திகை)

கரவெட்டி செங்குந்தான் வீதியில் அமைக்கப்பட்டுள்ள இடம் பெயர்ந்தோர் முகாமில் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக அம்மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஜீ.ரி.சற் இன் ஏற்பாட்டில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையினால் இரண்டு நாட்களுக்கு ஒரு தடவை வழங்கப்படுகின்ற குடிநீர் ஒரு நாளைக்கு மாத்திரமே போதுமானதாக உள்ளதென தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இரண்டு கொள்கலன்களில் மாத்திரம் வழங்கப்படும் இக் குடிநீரை இப் பகுதியில் நிரந்தரமாக வசிப்பவர்களும் பயன்படுத்துகின்றனர்.

இக்காரணங்களினால் இம் முகாமில் வசிக்கும் மக்கள் நீண்ட தொலைவிற்கப்பால் சென்று குடிநீரைப் பெற்றுக் கொள்ள வேண்டியிருப்பதுடன், குடிநீரைச் சேமித்து வைப்பதிலும் இடர்பாடுகளை எதிர் நோக்குவதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

(செ-23)

## சதுரங்க கழகம் அங்குரார்ப்பணம்

(அரியாலை)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் கடந்த 9 ஆம் திகதி வியாழக்கிழமை சதுரங்கக் கழகம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.(உ-106)

# புராதன சிறப்பும் புண்ணியப் பேறும் நிறைந்த 'ஸ்கந்தவரோதயா'

## பரிசளிப்பு விழாவில் அதிபர் உரை

(யாழ்ப்பாணம்)

புராதனச் சிறப்பும் புண்ணியப் பேறுகளும் நிறைந்த ஸ்கந்தவரோதயக் கல்லூரி யான்து புகழ் பூத்த கல்வியியலாளர்களைக் காலந்தோறும் உருவாக்கிய வண்ணம் நிற்கின்றது.

அண்மையில் யா. ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெற்ற நிறுவுநர் நாள் பரிசளிப்பு விழாவின் போது கல்லூரி அதிபர் க. சிவாஜி மேற்கண்டவாறு தமது உரையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், ஔவையார் காலத்தில் ''வரப்புயர'' என்ற வாழ்த்து போதுமானதாயிருந்தது.

நம் காலத்திலோவெனில் சமாதானம் ஒன்றே முதலும் முக்கியமுமான தேவையாய் இருக்கின்றது. இந்த நிலை என்று தீருமோ என்று ஏங்குவதாற்பயனில்லை.

அதனை ஆண்டவன் கையில் விட்டு, இயன்றவரை பிறர்க்கு உதவி செய்து,நேர் சீராக வாழ்ந்து வளரும் சமுதாயத்தை வாழ்வாங்கு வாழவைப்போம் என்றார்.

இந்நிகழ்வில், பேராசிரியர் குமாரவடிவேல் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டு உரையாற்றினர். (உ-ச)

# வருமானம் இன்மையால் முயற்சி பின்னடிப்பு

## பதில் ஆணையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபைக்குப் போதிய வருமானம் இன்மையால் ஏற்கெனவே திட்டமிட்ட பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக மாநகரசபை பதில் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இதனால் திட்டமிடப்பட்டவற்றுள் மிக முக்கியமானவை எனக்கருதப் படும் வேலைத் திட்டங்கள் மாத்திரமே தற்போது முன்னெடுத்துச் செல்லப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மாநகர சபைக்குள் வாழும் பலர் சோலைவரி கட்டுவதில் அக்கறையின்றிக் காணப்படுதல் மற்றும் வீட்டுரிமையாளர் பலர் வெளிநாடு சென்று விட்டதால் நீண்ட காலமாகச் சோலைவரி அறவிடப்படமுடியாத நிலை ஏற்பட்டுள்ளமை மாநகர சபையின் வருமானத்தில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்திபிருப்பதாகவும் பதில் ஆணையாளர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார் (உ-12)

# அப் பாறையில் குண்டுதாக்கு மோட்டார் சைக்கிள் சேதம்

## அக்கரைப்பற்றில் சம்பவம்

(ஏறாவூர்)

அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று பொத்துவில் வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை அன்று விசேட அதிரடிப் படையினரின் ஜீப் வண்டி மீது குண்டுத்தாக்குதல் நடத்துவதற்குப் பயன படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளை இதுவரை எவரும் உரிமை கோரவில்லை.

இதனால் மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளரின் உதவி நாடப்பட்டுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸ் அதிகாரி எஸ். ரி. மீடின் தெரிவித்தார்.

இத்தாக்குதல் சம்பவத்தில் மோட்டார் சைக்கிள் சுக்குநூறாகியதோடு, ஜீப் வண்டியும் பலத்த சேதத்துக்குள்ளானது அதில் பயணம் செய்த மூவர் காயமடைந்தனர்.

இலக்கத்தகடு இல்லாது, கிளைமோர் குண்டு பொருத்தப்பட்டு பிரதான வீதியோரத்தில் அநாமதேய நிலையில் நிறுத்தப்பட்டிருந்த இம் மோட்டார் சைக்கிளின் உரிமையாளரைக் கண்டுபிடிக்கப் பொலிஸார் புலன்விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

(க-ச-108)

# அவுஸ். உதவித் தூதுவர் மட்டக்களப்பு விஜயம்

(ஏறாவூர்)

அவுஸ்திரேலிய நாட்டின் இலங்கைக்கான உதவித் தூதுவர் செல்வி கதிக்ளத்மென் இன்று திங்கட்கிழமை மட்டக்களப்புக்கு விஜயம் செய்யவுள்ளார்.

திங்கள், செவ்வாய் ஆகிய இரு தினங்களிலும் மட்டக்களப்பில் தங்கியிருக்கும் இவர் பாராளுமன்ற உறுப்பினர் அலி ஸாஹிர் மௌலானாவை அவரது ஏறாவூர் இல்லத்தில் சந்திப்பதோடு, தேசிய மனித உரிமைகள் ஆணையம், சமாதான சபை மற்றும் வர்த்தகர் சங்கம் போன்ற பொது நல அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ளார். அதனையடுத்து அவுஸ்திரேலிய உதவித் தூதுவர் அம்பாறை மாவட்டத்துக்கு விஜயம் செய்வார்.

கிழக்கு மாகாண மக்களின் தற்போதைய வாழ் நிலை மற்றும் மனித உரிமைகள் குறித்தும் நேரடியாக ஆராய்வதற்கென இந்த விஜயம் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-108)

# விறகுவெட்டச்சென்றவேளை காணாமற்போனோர் படையினரால்விடுதலை

(ஏறாவூர்)

மட்டக்களப்பு செங்கலடி பகுதியிலுள்ள கோப்பாவெளி காட்டுப்பகுதிக்கு விறகு சேகரிக்கச் சென்றவேளை காணாமல் போனதாக கருதப்பட்ட 15 பேரும் மகா ஓயா விசேட அதிரடிப்படையினரால் நேற்று ஞாயிற்றுக் கிழமை விடுவிக்கப்பட்டனர்.

கடந்த சனிக்கிழமைகாலை புல்லுமலை மற்றும் உறுகாமப் பகுதிகளைச சேர்ந்த 15 கூலித்தொழிலாளர்கள்விறகு சேகரிக்கச் சென்று, குறித்த நேரத்தில் தவீடு திரும்பாதையடுத்து மட்டக்களப்பு மாவட்டபாராளுமன்ற உறுப்பினர் சாஹிர் மௌலானா மகா ஓயா அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரியின் கவனத்தின் கீழ் கொண்டுவந்திருந்தார்.

இதனையடுத்து அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டு விசாரணைகளின் பொருட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த மேற்படி 15 பேரும் விடுவிக்கப்பட்டுள்ளனர். (க-உ)

# பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் மக்களுக்கு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து,தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவில் கடந்த ஒக்டோபர் மாதம் வரை நிவாரணம் பெற்று, கரவெட்டி-பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் தங்கியுள்ளவர்களுக்கான நவம்பர் மாத நிவாரண அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகின்றது.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 19.00 மணிக்கு, புலோலியில் இயங்கும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக உப அலுவலகத்தில் வைத்து இப்பத்திரம் வழங்கப்படவுள்ளது.

நிவாரண அனுமதிப் பத்திரத்தை குடும்பத் தலைவர் சமுகமளித்துப் பெற்றுக் கொள்ளுமாறும்,வரும்பொழுது பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட பங்கீட்டு அட்டை தென்மராட்சி பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட பங்கீட்டு அட்டை, தற்பொழுது தங்கியுள்ள பிரதேச செயலகங்களில் வழங்கப்பட்ட பங்கீட்டு அட்டைகள் என்பவற்றையும் தம்முடன் எடுத்து வருமாறு பச்சிலைப் பள்ளிப் பிரதேசசெயலர் எஸ். புத்திசிகாமணி கேட்டுக் கொண்டுள்ளார். (செ)

# நெல்லியடி,கரவெட்டியில் திருட்டுக்கள் அதிகரிப்பு

நெல்லியடி,கரவெட்டிப் பகுதிகளில் திருடர்களின் அட்டகாசம் வெகுவாக அதிகரித்துள்ளது.

அண்மையில் கரவெட்டி மேற்குப் பகுதியிலுள்ள வீடொன்றில் நள்ளிரவு வேளை உட்புகுந்த திருட்டுக் கோஷ்டி, வீட்டிலிருந்தவயோதிப மாதுவையும் அவரது விவேகம் குறைந்த மகளையும் தாக்கி விட்டு பெறுமதிமிக்க தங்கச்சங்கிலி ஒன்றையும்,ஒரு தொகைப் பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

திருடர்கள் குறித்து இப் பகுதி மக்கள் விழிப்பாக இருந்த போதும் இத்திருட்டுச் செயல்கள் குறைந்த பாடு இல்லையென பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (செ-41)

## பொருட் காட்சி

[மந்திகை]

தேசிய கூட்டுறவுச் சபையும் கட்டைவேலி, நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமும் இணைந்து நடத்திய அடிப்படை மனையியல் பயிற்சியில் கலந்து கொண்டவர்களினால் நடத்தப்படுகின்ற பொருட்காட்சி எதிர்வரும் 18 ஆம், 19 ஆம் திகதிகளில் சங்கத்தின் பல்சேவை நிலையத்தில் நடைபெறவுள்ளது. (செ-23)

## விமானப்படைத் தளபதி பா. விஜயம்

இலங்கை விமானபபடைத் தளபதி எயா மார்சல் ஜெயலத்வீரக்கொடி, 5நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுகடந்த வெள்ளிக்கிழமைபாகிஸ்தான்போய்ச் சேர்ந்துள்ளார். (உ)

## கசிப்பு உற்பத்தி மும்முரம் தகவல்தர மக்கள் தயக்கம்
### தங்கோடையில் சம்பவம்

(ஊர்காவற்றுறை)

காரைநகர் தங்கோடைகிராமத்தில் மிகவும் மும்முரமாகக் கசிப்பு உற்பத்தி செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது பற்றிப் பொதுமக்கள் அறிந்திருந்தும் போதிய தகவல் தருவதற்குத் தயக்கம் காட்டுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்களால் விரைந்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் 'குடிமக்களின்' தொல்லை பெரிதும் அதிகரித்து விடும் என பொதுமக்கள் தரப்பில் பெரிதும் அஞ்சப்படுகிறது. (செ-75)

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.
## 2001-ஆம் ஆண்டுக்கான
# கேள்வி அறிவித்தல்

(பொதுச் சந்தை, இறைச்சிக்கடைகள், கடைகள்).

வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தைகள், இறைச்சிக்கடைகள் கடைகள் என்பவற்றை 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 2000.11.22 ஆம் திகதி பி.ப 2.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் யாவும் வலிகாமம் தெற்குப் பிரதேசசபைத் தலைமை அலுவலகத்தில்உரிய கேள்வி வைப்புப்பணம்,கேள்விப்பத்திரப் பணம் ஆகியன செலுத்துவதன் பேரில் 2000.11.21 ஆம் திகதி பி.ப 2.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்களைத் தயாரித்து தலைவர்,வலிகாமம் தெற்குப் பிரதேசசபை.சுன்னாகம் என்ற முகவரிக்குக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகையின் பெயர் எழுதப்பட்டு,அரக்கு முத்திரையிட்டுப் பதிவுத் தபால் மூலம் 2000.11.22 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.அல்லது குறித்த நேரத்திற்கு முன்னர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும்.கேள்விப்பத்திரங்கள் 2000.11.22 ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்குப் பிரதேச சபைத் தலைமை அலுவலகத்தின் கேள்விச் சபையால் திறந்து பரிசீலிக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ,பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.கேள்விப்பத்திரங்களைப் பெறுபவர்கள் அடையாளஅட்டையையும் தவறாது கொண்டுவருதல் வேண்டும்.தனியார் காணிகளில் இறைச்சிக்கடை நடத்துவதற்குக் காணிச் செந்தக்காரரிடமிருந்து அனுமதிக் கடிதம் பெற்றுச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

கேள்வி விண்ணட்பங்கள் சபையில் பெற்ற பின்னர் உரிய முறைப்படி விண்ணப்பிக்கா விடின் பெறப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் நேரத்திற்கு முன்னதாகச் சபைக்கு ஒப்படைக்கப்படல் வேண்டும்.அவ்வாறு சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரரின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதையும் அறிபத்தருகின்றேன்.

எந்தவொரு கேள்வியையும் அல்லது அதன் பகுதியையும் காரணங்காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ தலைவருக்கு அதிகாரமுண்டு சந்தைகளைக் குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் சந்தைக்கு வரும் பொருட்களின் பெறுமதியின் 2% இற்கு மேல் வரி அறவிடக்கூடாது.

இது சம்பந்தமாக மேலதிக விபரங்களையும் நிபந்தனைகளையும் பிரதேச சபையின்தலைமை அலுவலகத்திலும்,உப அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

### அட்டவணை

| | குத்தகை விபரம் | மாத வாடகை | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு பணம் | ஆகக்குறைந்த மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | **சுன்னாகம் உப அலுவலகம்** | | | | |
| 1. | சுன்னாகம் மத்திய சந்தை (துவிச்சக்கர வண்டி தரிப்பிடம் உட்பட) | — | 500.00 | 5000.00 | 18,00,000.00 |
| 2. | மாட்டிறைச்சிக்கடை-சுன்னாகம் | 100.00 | 200.00 | 2000.00 | 3,30,500.00 |
| 3. | ஆட்டிறைச்சிக்கடை சுன்னாகம் | 100.00 | 150.00 | 1500.00 | 60,000.00 |
| 4. | கருவாட்டுக்கடை இல. 3 | 60.00 | 50.00 | 100.00 | 3,850.00 |
| 5. | ,, இல. 4 | 60.00 | 50.00 | 100.00 | 6,160.00 |
| 6. | ,, இல. 5 | 60.00 | 50.00 | 100.00 | 9,900.00 |
| 7. | ,, இல. 6 | 60.00 | 50.00 | 100.00 | 3,850.00 |
| 8. | ,, இல. 7 | 60.00 | 50.00 | 100.00 | 3,850.00 |
| 9. | உடுவில் கிளிச் சந்தை | — | 150.00 | 1500.00 | 65,000.00 |
| 2. | **உடுவில் உப அலுவலகம்.** | | | | |
| 1. | மருதனார்மடம் பொதுச்சந்தை(துவிச்சக்கர வண்டி தரிப்பிடம் உட்பட) | — | 500.00 | 5000.00 | 17,00,000.00 |
| 2. | இணுவில் சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | — | 100.00 | 1000.00 | 40.000.00 |
| 3. | இணுவில் ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 150.00 | 1500.00 | 55.000.00 |
| 4. | மல்வம் மாட்டிறைச்சிக்கடை | — | 150.00 | 1500.00 | 50.000.00 |
| 3, | **ஏழாலை உப அலுவலகம்.** | | | | |
| 1. | ஏழாலைச் சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | — | 250.00 | 1000.00 | 20,000.00 |
| | ஏழாலை மாட்டிறைச்சிக்கடை | — | 150.00 | 1500.00 | 45,000.00 |
| 4. | **இழுபொறி இயந்திரம்** பெட்டியுடன் வாடகைக்கு அமர்த்துதல் 01-01-2001 தொடக்கம் 30-06-2001 வரையான காலப்பகுதிக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட குப்பை கூளங்களை அகற்றுவதற்கு இழுபொறி இயந்திரம் வாடகைக்கு அமர்த்துதல் (நன்னியக்க உயர்த்தி இருத்தல் வேண்டும்.) | — | 100.00 | 500.00 | — |

**க. நவநீதன்**
(தலைவருக்காக)
உபதலைவர்
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

வலிகாமம் தெற்குப் பிரதேச சபை,
சுன்னாகம்.
2000-11-07

(கி-1025)

## நிவாரண முத்திரை விநியோகம்

(மந்திகை)

இடம் பெயர்ந்துகரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் வசிப்பவர்களுக்கான நவம்பர் மாதத்திற்கான85 ஏ, பிநிவாரண முத்திரையும் சமூர்த்தி நிவாரண முத்திரையும் வழங்கப்படுவதாக பிரதேச செயலர் எஸ். ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார். (செ-23

## பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

சிறுவர் பாதுகாப்பு நிதியமும் புள்ளி விபரத் திணைக்களமும் இணைந்து யாழ். செயலகத்தில் ''மக்களியலும் சுகாதாரமும் 2000 ஆண்டுக்கான அளவீடு'' என்ற தலைப்பிலான பயிற்சிப் பட்டறை கடந்த 9 ஆம் திகதி முதல் நடத்தப்பட்டுவருகின்றது.

யாழ். குடாநாட்டிலுள்ள ஐந்து வயதிற்குட்பட்டசிறுவர்களினதும், பதினைந்து வயதிற்கும் நாற்பத்தி ஐந்து வயதிற்கும் இடைப்பட்ட பெண்களினதும் சுகாதார நலன்களை மேம்படுத்தும் நோக்கிலேயே மேற்படி பயிற்சிப் பட்டறை நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (செ-12)

## வாககாளர் பதிவுகள்

(அரியாலை)

உடுவில் வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில், இரண்டாயிரம் ஆண்டுக்கான வாக்காளர்பதிவுகள் இம்மாதம் 9ஆம் திகதி முதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

18வயதிற்கு மேற்பட்ட, எந்தவொரு இடத்திலும் இது தொடர்பான பதிவுகள் மேற்கொள்ளாதவர்கள் மார்கழி மாதம் 15ஆம் திகதி வரை நேரில் வந்து விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்க முடியுமெனச் சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் பி. புவனேஸ்வரராஜா தெரிவித்துள்ளார். (உ - 106)

## கைதானோர் விடுதலை

(ஏறாவூர்)

ஏறாவூர் - ஐந்தாம் குறிச்சி தமிழ்க் கிராமத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பொலிஸார் நடத்திய சுற்றிவளைப்புத் தேடுதலின்போது கைது செய்யப்பட்டு ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த 6 பெண்கள் உட்பட நாற்பத்தாறு பேரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்களது விடுதலை குறித்து அலிஸாஹிர் மௌலானா எம். பி. சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபாலி ஹேவகேயுடன் தொடர்பு கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இன்று ஒரு தகவல்

# நா காக்க நா இழந்தான்!

அன்பும் பண்பும் கொண்டார்போல் சேர்ந்து பழகி-கொஞ்சிக் குலாவி அயர்ந்திருக்கும் நேரத்தில் பின்னால் ஆழக் குழிபறிக்கும் கொடியவர்கள் நிறைந்த உலகமிது.

இத்தகைய 'அபாயச்சின்னங்களுக்கு' மத்தியில்தான் உடனிருந்து செயலாற்றும் உத்தமத் தோழர்களின் நலனுக்காக எதையும் தியாகம் செய்யும் நல்ல நெஞ்சினர்களையும் காணுகிறோம்.

அப்படிப்பட்ட அறமும் வீரமும் கொண்ட ஒருவனின் கதைதான் இது.

முகத்திலே எப்போதும் அமைதி-குனிந்த தலை–எதையும் தாங்கிடும் இதயம் உண்டு என்பதைச் சொல்லாமற் சொல்லும் சாந்தமான தோற்றம் இப்படி நின்று கொண்டிருந்தான் அவன்.

'ஜீனோ! சொல்லிவிடு நீ படித்தவன், பெரிய தத்துவ ஞானி, உன் மேதைத் தன்மையை கேவலம் என்னுடைய உடைவாளுக்கு இரையாக்கி விடாதே. யார் அந்தத் துரோகிகள்! உன் உடனிருந்து என்னைக் கவிழ்க்கத் திட்டமிட்ட சதிகாரர்கள் யார்? பெயரைச் சொல்லு. இடத்தை நான் அறிகிறேன்! சொல்லிவிடு! சொல்லிவிடு... தர்பார் மண்டபத்தில் இப்படி எழும்பியது மன்னனின் கோபக்குரல். அவன் கிரேக்கத்திலிருந்த எலியா என்ற இடத்து சர்வாதிகாரி. கி.மு. 340 இல் அரசாண்டவன்.

ஆனால் ஜீனோ மட்டும் வாயைத் திறக்கவில்லை. குனிந்த அவனது தலை மட்டும் இப்படியும் அப்படியுமாக அசைந்தது. 'கத்தி முனையைக் காட்டினாலும் நான் கடமை தவறமாட்டேன்; என் தோழர்களைக் காட்டிக் கொடுக்க மாட்டேன்!' என்று மறுப்பது போலிருந்தது அது.

மன்னன் சீறினான்... ஆதிக்க வெறிபிடித்த அந்த வேந்தன், தனது வாழ்நாளில் இப்படி ஒரு பிடிவாதக்காரனைப் பார்த்ததில்லை.

மக்களை உணர்வற்ற மரக்கட்டைகளாக மதித்து தன்னுடைய எதேச்சதிகாரத்தின் காலடியில் மிதித்து, துவைத்து கோர நர்த்தனம் ஆடுபவன் அவன்; மதுவும் மங்கையுமே வாழ்வின் சுகம் எனக் கருதி, நாட்டு மக்களின் வேதனை கலந்த ஓலத்திற்கு இடையே இன்பபுரிப் பயணம் நடத்தும் நாசகாரன்!

அவன், தனக்கு எதிராக, தன்னுடைய மிருக ஆட்சிக்கு எதிராக தோன்றும் எந்த சக்தியைத்தான் அனுமதித்திருப்பான்? அந்த எதிர்ப்பு அணியில் ஜீனோ மட்டும் அவனிடம் சிக்கினான்.

ஆனால் ஜீனோவின் வாய் திறக்கவில்லையே. மன்னன் கோர சொரூபம் எடுத்தான். சித்திரவதை செய்தான் சுடுநீரில் தள்ளி தீயால் பொசுக்கினான்.

இந்தப் பயங்கரத் தாக்குதலில் சிக்கித்தவித்த ஜீனோவின் வாய் கடைசியில் திறந்தது:

தோழர்களைக் காட்டிக் கொடுக்கவா? இல்லை! இல்லை!

தன் கொள்கையையும் மீறி எங்கே சித்திரவதை எனது நாவை அசைத்துவிடப் போகிறதோ, என்று பயந்து தனது நாவையே துண்டாக வெட்டி விடத்தான்!

தனது நாக்கைத்தானே அறுத்து; அதை அரசனின் முன் எறிந்தான்.

அவன் பேசும் சக்தியிழந்தான். கொள்கை வெற்றி பெற்று துரோகம் வீழ்ந்தது.

நன்றி
**பொய்கை**

# சுட்டுக்கொல்லப்பட்ட எம். பி யின் சகபாடிக்கு பொலிஸ் பாதுகாப்பு

(ஏறாவூர்)

சுட்டுக்கொலை செய்யப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட எம். பி நிமலநாயகம் சௌந்தரநாயகத்துடன் மோட்டார் சைக்கிளில் சென்ற செல்வத்தம்பி யோகநாதனுக்கு மட்டக்களப்பு வைத்தியசாலையில் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

யோகநாதனின் உடல் நிலை தேறிவருகின்றபோதும் அவரது வாக்குமூலத்தைப் பெறக்கூடிய நிலையில் அவர் இல்லை என்று நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை நிமலநாயகம் சௌந்தரநாயகத்தின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்கும் யோகநாதனுக்கு ஆஸ்பத்திரியில் பாதுகாப்பாக இருந்த பொலிஸார் அனுமதி வழங்கவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# திருடர் கைவரிசை கல்வியங்காட்டில் சம்பவம்

(செம்பியன்பற்று)

கல்வியங்காடு செங்குந்தா இந்துக்கல்லூரிக்கு அண்மையில் படப்பிடிப்பாளரது வீட்டில் புகுந்த திருடர் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை திருடிச்சென்ற சம்பவம் அண்மையில் இடம் பெற்றுள்ளது.

இரண்டு டெக், வானொலிப்பெட்டிகள் உட்பட பெறுமதியான பொருட்கள் திருட்டுப் போயுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கல்வியங்காடு பூதவராயர் ஆலயத்திலும் திருப்பணி உண்டியல்கள உடைக்கப்பட்டதுடன், பல பொருட்களும் களவாடப்பட்டுள்ளன. (க-42)

# பொதுச் சுகாதார பரிசோதகர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகராட்சி மன்றத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகராக பு. ஆறுமுகதாசன் கடந்த செப்டம்பர் முதலாம் திகதி தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இங்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகராகப் பணியாற்றிக் கொண்டிருக்கையிலேயே பொதுச் சுகாதாரப் பயிற்சிப் பரீட்சையில் சித்தியடைந்த நால்வரில் இருவருக்கு ஏற்கானவே பொதுச் சுகாதாரப் பரிசோதகர் நியமனம் வழங்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (செ)

# ஆசிரியரை மாணவர் மதிப்பதில்லை மாறாக மதிப்பிடுகிறார்கள்

## யாழ்.இந்து முன்னாள் அதிபர் தெரிவிப்பு

(அரியாலை)

இன்று ஆசிரியர்களைமாணவர்கள் மதிப்பதில்லை. மாறாக மதிப்பிடுகிறார்கள். இதற்கேற்ற வகையில் எம்மைத் தயார்படுத்துவதன் மூலமே மாணவர் எதிர்பார்ப்பவற்றை எம்மால் வழங்க முடியும். இதனை நன்குஎடுத்தியம்பும் திறன் 'புலர்வு' சஞ்சிகைக்கு நிறையவே உண்டு.

யாழ்ப்பாணம்தேசிய கல்வியியற் கல்லூரி தமிழ் மன்றத்தின் 'புலர்வு' கையெழுத்துப் பிரதி வெளியீட்டு விழா, 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மன்றத் தலைவர் செல்வி ஆர். தயாளினி தலைமையில் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற போது வெளியீட்டுரை நிகழ்த்திய யாழ் இந்துக் கல்லூரி முன்னாள் துணை அதிபர் க.சிவராமலிங்கம்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆசிரியர் சிவராமலிங்கம் மேலும் உரையாற்றுகையில்;

'அச்சியந்திரத்தின் உதவி இல்லாமல் உங்கள கைவரிசையில் வெளிவந்துள்ள 'புலர்வில்' இக் கல்லூரியின் அத்தனை துறையினரும் பங்கு கொண்டுள்ளமை, பல்துறை விற்பன்னமும் கல்வியற் கல்லூரியில் முளை கொண்டுள்ளதை எடுத்தியம்புகின்றது

இன்று ஒப்படைக் கல்வி, மாணவர்கள் கற்றலில் கூடிய நேரத்தைச் செலவிடுவதற்கு உதவினாலும் கூட அவற்றைப் பரீட்சிக்கும் ஆசிரியரின் நேரத்தை வீணடிக்கிறது' என்றார்.

யாழ். பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராசா ஆய்வுரை நிகழ்த்துகையில்,

'பல புகழ்பூத்த எழுத்தாளர்கள் தமது முதல் ஆக்கத்தைக் கையெழுத்துப் பிரதி வடிவிலேயே வெளிக்கொணர்ந்தார்கள். டாக்டர் மு வரதராசன் முதல் சினிமாக் கலைஞர் வைரமுத்து வரை இப்பொருத்தப்பாட்டை அவதானிக்லாம். அதே வழியில் இப் 'புலர்வு' யாழ்ப்பாணத்தின புலர்வாக யாழ்.தேசியக் கல்வியியற்கல்லூரியின் புலர்வாக, சமூக கலாசார பண்பாட்டின் புலர்வாக பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட புலர்வாக அமைந்திருக்கிறது.

இப் 'புலர்வில்' உழைப்பின் உன்னதத்தை நான் கண்டேன். கல்கி, ஆனந்த விகடன், கலைமகளின் தன்மையை இதன் உள்ளடக்கம் கொண்டுள்ளதன் மூலம் ஆற்றல் திறன் வெளிப்படுகிறது. இதில் இடம்பெற்றுள்ள ஓவியங்கள் யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி சிறந்த ஓவியப் பாரம்பரியத்தை இம் மண்ணில் அறிமுகம் செய்து வைக்கப்போகிறது என்பதை உணர்த்தியது. என்று குறிப்பிட்டார். (உ-106)

# நிதி ஒதுக்கீடு

(மண்டைதீவு)

இரண்டாயிரம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து தீவுப் பகுதி தெற்குப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கான அபிவிருத்தித் திட்டங்களுக்கென சுமார் 20 இலட்சத்து50 ஆயிரம்ரூபா நிதிஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக வேலணைப் பிரதேச சபைத் தலைவர் என். குணாகரகுருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இவ் ஒதுக்கீட்டின் கீழ் செட்டிப்புலம், வேலணை கிழக்கு, துறையூர், புங்குடுதீவு, நயினாதீவு, மண்கும்பான் பகுதிகளில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப் படவுள்ளது. (உ - 11)

# இராசி பலன்

13-11-2000
(ஐப்பசி 28, திங்கள்)
துதியை பி.இ 12.50 வரை
ரோகிணி பி.இ 3.42 வரை
ராகுகாலம் 7.37- 9.07
சுபநேரம் 12.07- 1.37
அமிர்தம்

**மேடம்**
நியாயம் பேசுதல், மதிப்புக் குறைவு, முயற்சி தாமதம், அமைதியின்மை.

**இடபம்**
காரியம் நிறைவேறும், சுக வாழ்வு, ஆத்மீக சிந்தனை, பொருள் வரவு.

**மிதுனம்**
இடமாற்றம், முயற்சிதாமதம், சுப காரியச் செலவு, தன வரவு.

**கடகம்**
சினேகிதர்கள் தொடர்பு, கௌரவம், ரோகம், சந்தோசமான செய்தி.

**சிங்கம்**
நிலை மாற்றம், காரியம் கைகூடும், செய் தொழில் மேன்மை, அதிகாரிகள் தொடர்பு.

**கன்னி**
சிறுவியாதி, கட்டுப்பாடு, தன விரயம், பிரயாணம்.

**துலாம்**
காரிய தாமதம், பிரயாணக் தடங்கல், உறவினர் விருப்பின்மை, சிறுரோகம்.

**விருச்சிகம்**
கௌரவம், போசன சுகம், பிரயாணம், சுவாரஸ்யம்.

**தனுசு**
சந்தோச மிகுதி, காரியம் கைகூடும், பகைவர் விலகுவர்.

**மகரம்**
குடும்பக் கவலை, எடுத்த காரியம் தாமதம், அதிகாரிகள் சந்திப்பு.

**கும்பம்**
சிறு வியாதி, நிலைமாறல், தன்னம்பிக்கைக் குறைவு, தாய்வழி உறவு.

**மீனம்**
இளைய சகோதரர் உதவி, கிட்டிய பிரயாணம், முயற்சி பலிதம், பணவரவு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்**

# உழவுயந்திரத்தை நெஞ்சிலேற்றி சாதனை

(கொழும்பு)

நெஞ்சினிலே உழவு இயந்திரத்தை ஏற்றி 5 நிமிடங்கள் 33 விநாடிகள் வரை வைத்துக் கொண்டு சாதனை புரிந்த நிகழ்வு நேற்று முன்தினம் மட்டக்களப்பில் இடம்பெற்றது

இரும்பரசர் சாண்டோ சண்முகதாஸின் ஆஸ்தான சீடரான ஸ்ரீதாஸ் நேற்று முன்தினம் மட்டக்களப்பு அரசினர் கலாசாலை மைதானத்தில் மேற்படிசாதனையை நிகழ்த்திக் காட்டினார்.

மூன்று தடவைகள் உழவு இயந்திரத்தை நெஞ்சில் ஏற்றிய அவர் அலவாங்கை நெஞ்சில் அடித்து வளைத்தல், இரும்புப்பட்டத்தை புயத்திலும் தலையிலும் அடித்து வளைத்தல், 1500 இறாத்தல் எடையுள்ள கல்லை நெஞ்சில் வைத்து 15 இறாத்தல் எடையுள்ள சுத்தியலால் அடித்து நொருக்குதல், 15 மில்லிமீற்றர் பருமனும் 3 மீற்றர் நீளமும் கொண்ட இரும்புக்கம்பியை மூக்கில் வைத்து வளைத்தல் போன்ற பல சாதனைகளை நிகழ்த்திக் காட்டி பெருமளவு மக்களை வியப்பூட்டியுள்ளார். (ந-2)

# வல்வெட்டித்துறையில் மாணவர் கௌரவிப்பு

(புலோலி)

வல்வெட்டித்துறை மக்களும், வல்வை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கமும் இணைந்து அப்பகுதியில் பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்கிய மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

வல்வை மகளிர் கல்லூரியில், நகரபிதா எம். கே. சிவாஜிலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், விளையாட்டில் சாதனை நிகழ்த்திய பாலேந்திரா வசந்த், 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் திறமையாகச் சித்தியடைந்த புஷ்பராஜா, பிரகலாதன், சிவரூபன், பிரகதீஸ், கலாதீபன், ரஞ்சித் நிலானியா. அனித ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

இச்சாதனையாளர்கள், வல்வெட்டித்துறை சந்தியிலிருந்து மக்கள் புடைசூழ மங்களவாத்தியங்கள் ஒலிக்க ஊர்வலமாக விழா இடம் பெற்ற இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில், யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம், வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் எஸ் சிவராஜா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு மாணவர்களைப் பாராட்டிப் பரிசில்கள் வழங்கினர். (உ-52)

# புத்தூரில் மருத்துவமனை விரைவில் விஸ்தரிப்பு காணி வாங்கவும் முடிவு

புத்தூர் மருந்துவமனையை விஸ்தரிக்கும் நோக்கில் புதிய காணி கொள்வனவு செய்வதற்கென, அபிவிருத்திக் குழுவொன்று அங்கு அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

காணி கொள்வனவு செய்யும் பட்சத்தில் கட்டட வேலைகளை செய்து கொடுப்பதற்கு ஈ.பி.டி பியினர் உறுதிப்பாடு வழங்கியதையடுத்தே இவ் அபிவிருத்திக் குழு அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை, இவ் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஈ.பி.டி.பியின்கோப்பாய்ப்பிரிவு அமைப்பாளர் ரவி, புத்தூர் பகுதியின் சகல இடங்களுக்கும் விரைவில் மின்சாரம் வழங்கப்பட விருப்பதாகவும் உறுதி மொழி அளித்துள்ளார். (உ-57)

### காஷ்மீர் பிரச்சினையை தீர்க்க

# இஸ்லாமிய நாடுகள் இந்தியாவிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்

## அமைப்புக்கள் கோரிக்கை

[இஸ்லாமாபாத்]

காஷ்மீர்விவகாரத்தொடர்பாக, பேச்சுவார்த்தை நடத்த உலக இஸ்லாமியத் தலைவர்கள் இந்தியாவுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என இஸ்லாமியகுழுக்கள் பலவும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இதனை உறுதிப்படுத்திய பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்துல் ஷடார், காஷ்மீர் பிரச்சினைக்கு அமைதியான வழியில் தீர்வுகாண முத்தரப்பு பேச்சுவார்த்தைக்கு இந்தியா முன்வர வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேசமயம்,

நேற்று ஆரம்பமாகி மூன்று தினங்கள் கட்டாரில் நடைபெறும் இஸ்லாமிய அமைப்புக்கள் மாநாட்டில், காஷ்மீர் பிரச்சினைக்கான தீர்வு குறித்து தீர்மானம் ஒன்றை எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான், நைஜீரியா, சவூதி அரேபியா உள்ளிட்ட 56 நாடுகள் இம் மாநாட்டில் கலந்து கொள்வது குறிப்பிடத்தக்கது. [உ]

# 'த காஸ்ற்' கப்பல் விவகாரம் முயற்சி வெற்றியளிக்க வில்லை

(மொஸ்கோ)

கடலில்மூழ்கிய, 'தகாஸ்ற்' ரஷ்ய அணுவாயுத நீர்மூழ்கிக் கப்பலின் விபத்துக்கான காரணங்களை கண்டறிவதில் கடந்த 3 வாரங்களாக ரஷ்ய கடற்படை நிபுணர்கள் மேற்கொண்ட முயற்சிகள் பலிதமாகவில்லை என சம்பந்தப்பட்ட தரப்பினர் அறிவித்துள்ளனர்.

இதேவேளை, மீட்புப் பணியாளர்களால் மீட்கப்பட்ட இறந்த மாலுமி ஒருவரிடமிருந்து பெறப்பட்ட கடிதத்தில் விபத்துக்கான காரணம் குறித்து எழுதப்பட்டிருப்பதாகவும், அப்பகுதியை தணிக்கை செய்து கடிதத்தின் மீதிப் பகுதியையே ரஷ்ய அரசு வெளியிட்டிருப்பதாகவும் அங்கிருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்று குற்றம் சாட்டியுள்ளது.

இருப்பினும், கடந்த ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி பாலரன்ஸ் கடலில், 'த காஸ்ட்' என்ற ரஷ்ய அணுவாயுத நீர்மூழ்கிக் கப்பல் 118 மாலுமிகளுடன் கடலில் மூழ்கியமைக்கு, வேற்று நாட்டு நீர்மூழ்கிக் கப்பல் அதனுடன் மோதியதே காரணம் என ரஷ்ய அரசு தொடர்ந்து கூறிவருவதும் குறிப்பிடத்தக்கது. (உ)

# காங்கிரசிற்கு வெளியே ஜனநாயகப் போராட்டம்

(புதுடில்லி)

இந்திரா காங்கிரஸ் கட்சிக்குள் நடைபெறும் ஜனநாயகப் போராட்டமும் சுயகௌரவத்துக்குமிடையே நடைபெறும் போராட்டமும் இனி கட்சிக்கு வெளியேயும் நடைபெறும் என்று காங்கிரஸ் தலைவர் பதவிக்கு போட்டியிடும் ஜிதேந்திரப் பிரசாத் கூறினார்.

காங்கிரஸ் தலைவர்பதவிக்காக சோனியாகாந்திக்கெதிராகப் போட்டியிடும் அவர் மேலும் தெரிவிக்கையில்; தொண்டர்களை அடிப்படையாகக் கொண்டு கட்சி வளர வேண்டுமேயன்றி தலைவர்களின் முறையிலே கட்சி வளர்வது விரும்பவில்லையென்று தெரிவித்தார். (து)

# பட்னா வீதி விபத்தில் பத்துப் பேர் பலியாகினர்

(பட்னா)

பீஹார் மாநிலத்தில் இரவு வேளையில் இடம் பெற்ற பேருந்து விபத்தொன்றில் பத்துப் பேர் உரியிழந்தனர் முப்பது பேர் காயமடைந்தனர்.

பட்னா நகரில்இரவுவேளையில் பயணிகள் பஸ் ஒன்று பாலத்தில் சென்று கொண்டிருக்கையில் எதிரே வந்த குதிரை வண்டியுடன் மோதியதில் பத்துப் பேர் நசிந்து இறந்தனர். முப்பது பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்றனர். இறந்தவர்களின் குடும்பங்களுக்கு ஒரு இலட்சம் ரூபா நஷ்டஈடும், வேலை வாய்ப்பும் கொடுப்பதாக அரசு அறிவித்துள்ளது. (து)

# ஐக்கிய நாடுகள் சபையிடம்

## பாலஸ்தீன அதிபர் வேண்டுகோள்

(ஜெருசலேம்)

இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள பாலஸ்தீனர் வாழும் பகுதிகளைக் காக்க பன்னாட்டுப் படைகளை அனுப்புமாறு ஐக்கிய நாடுகள் பந்தோபஸ்து சபையிடம் யஸீர் அரபாத் வேண்டுகோள் விடுத்தார்.

பாலஸ்தீன அதிபர் அரபாத்தின் இக்கோரிக்கையையடுத்து இஸ்ரேல் இதனை வன்மையாக மறுத்தது.

இதேவேளை அமெரிக்கா இது தொடர்பாக இஸ்ரேலின் பூரண ஆதரவுஇல்லாமல் அரபாத்தின கோரிக்கையை ஏற்க முடியாதென்று கூறிவிட்டது.

இதேவேளை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபை பாலஸ்தீனத்தின் படை உதவிக் கோரிக்கையை ஒட்டிய கூட்டத்தை விரைவில் கூட்ட இருக்கின்றது. ஆனால் அமெரிக்காவோ பாதுகாப்புச் சபைக்கு இந்த விவகாரம் வருமானால் தான் (வீட்டோ) இரத்து அதிகாரத்தைப் பயன்படுத்தப் போவதாக எச்சரித்துள்ளது.

ஆனால் பிரான்ஸ் ஆயுதமில்லாத ஐ. நா. படைகளை அனுப்பலாம் என்று கருத்துத் தெரிவித்தது.

இதேவேளையில் இஸ்ரேல் இக் கருத்தையும் ஏற்கமறுத்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### செய்திப்பரல்

★ அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தல்குளறுபடிகளால் பங்குச் சந்தைகளின் பெறுமதி சரியத் தொடங்கி விட்டது.

★ சிங்கப்பூரில் இந்திய ஜனாதிபதிக்கு விசேட வரவேற்பு வழங்கப் பட்டிருக்கிறது.

# நஞ்சருந்திய பெண் பிரேத அறைக்குள் அனுமதி

(புதுடில்லி)

நஞ்சருந்திய நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட பெண் ஒருவர் பிரேத அறையினுள் சேர்க்கப் பட்டுள்ளார்.

இந்தியாவின் கேரள மாநிலத்திலுள்ள அலாவிஸா மாவட்டத்திலேயே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

நஞ்சருந்திய நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட இப் பெண் நோயாளர் விடுதியில் சேர்க்கப்படாது பிரேத அறையில் சேர்க்கப்பட்டமைக்கு, வைத்தியசாலை ஊழியர்களின் கவனக் குறைவே காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. [செ]

# சுவர் இடிந்து வீழ்ந்ததில் மூவர் ஸ்தலத்தில் பலி

(கொழும்பு)

கொழும்பு ஜிந்துப்பிட்டிப் பகுதியிலுள்ள வீடொன்றின் சுவர் இடிந்து விழுந்ததில் மூவர் ஸ்தலத்தில் கொல்லப் பட்டனர்.

இச்சம்பவம் நேற்று முன் தினம் நள்ளிரவு இடம்பெற்றது. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கணவன், மனைவி, மகள் ஆகியோரே சுவர் விழுந்து நசியுண்டு இறந்தவர்களாவர். (க-05)

# மனித உரிமை ஆணைக்குழு இன்று முதல் யாழில்

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய நிலையம் இன்று முதல் தனது பழைய இடத்தில் இயங்க உள்ளது.

மேற்படி காரியத்தில் மின் இணைப்பு கருவிகள் பொருத்தும் வேலைகள் முடிவுற்றதை அடுத்து மேற்படி நிலையம் செயல்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பகுதியில் இடம் பெற்ற யுத்த அனர்த்தத்தை அடுத்து இப்பணிமனை இங்கிருந்து அகற்றப் பட்டு பல்வேறு இடங்களில் செயற்பட்டு வந்ததை அடுத்து தற்போது மீண்டும் பழைய இடத்தில் செயற்படுவது குறித்து பலரும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். (க-12)

# வீதி திருத்தம் இல்லை

(கரணவாய்)

கரவெட்டிப்பிரதேச சபைக் குட்பட்ட கரணவாய், தலையாட்டி, மண்டான்வீதிநீண்ட நாட்களாகத் திருத்தம் செய்யப்படாமல் குண்டுங் குழியுமாகக் காணப்படுகிறது.

இதனால், போக்குவரத்துச்செய்வோர் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (உ - 27)


## வலி. தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.

## சந்தைப் பகுதியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கடைகளுக்கான

# மீள்கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் சந்தைப் பகுதியில் புதிதாகக் கட்டப்பட்ட கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 2000.11.22 ஆம் திகதி பி.ப 2.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் யாவும் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் உரிய கேள்வி வைப்புப்பணம், கேள்விப்பத்திரப் பணம் ஆகியன செலுத்துவதன் பேரில் 2000.11.21 ஆம் திகதி பி.ப 2.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்களை இணைப்பிரதிகளில் தயாரித்து 'உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கும், மற்றையது 'தலைவர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்' என்ற முகவரிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கடை இலக்கம் எழுதப் பட்டு அரக்கு முத்திரையிட்டு பதிவுத்தபால் மூலம் 2000.11.22 ஆம் திகதி பி.ப 2:00 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அல்லது குறித்த நேரத்திற்கு முன்னர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் 2000.11.22 ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு பிரதேசசபைத் தலைமை அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம். கேள்விப்பத்திரங்களைப் பெறுபவர்கள் அடையாள அட்டையையும் தவறாது கொண்டுவருதல் வேண்டும். எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ தலைவருக்கு அதிகாரம் உண்டு. இது சம்பந்தமான மேலதிக விபரங்களையும், நிபந்தனைகளையும் பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

அட்டவணை

| குத்தகை விபரம் | மாத வாடகை | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்புப் பணம் | ஆகக்குறைந்த மதிப்பீடு |
|---|---|---|---|---|
| சந்தை உட்புறக்கடைகள் இல: 17,20,27,28, 30,31,32 ஒவ்வொன்றுக்கும் | 375/- வீதம் | 200!- வீதம் | 1000/- வீதம் | 20000/- |

**க. நவநீதன்**
(தலைவருக்காக)
உபதலைவர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.
2000.11.06

(கி-1025)

இறந்த வெகுளியின் தீதே சிறந்த
உவகை மகிழ்ச்சியின் சோர்வு
- குறள்

**வலம்புரி**

## கூனிகளின் கொடுமை

இனப்பிரச்சினை விவகாரத்தில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவின் போக்கில் மாற்றம் தெரிவதாக இல்லை. இனவாதத்தைத் தூண்டும் தமிழர்களுக்கெதிரான கருத்துக்களையே அவர் கக்கி வருகிறார். நோர்வேத் தூதுவரின் வன்னி விஜயத்திற்குப் பின்பு பிரதமரின் உரையில் இனவாதம் உக்கிரமடைவதைக் காணமுடிகிறது.

ஜனாதிபதியின் உரைக்கு எதிர் மாறாக பிரதமரின் உரை அமைந்திருப்பது அரசாங்கத்தின் சமாதான முயற்சி எந்தளவிற்கு வெற்றியளிக்கும் என்ற ஐயப்பாட்டை ஏற்படுத்தியுள்ளது.

நோர்வேயின் விசேட தூதுவர் வன்னிக்குச் சென்று புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் பேசியது குறித்துத் தமக்கு எதுவும் தெரியாதென பிரதமர் கூறியது அவரின் மன வெதும்பலையும், தான் நாட்டின் பிரதமராக இருந்த போதிலும் அச்செய்தி தமக்குத் தெரியப்படுத்தாமல் தன்னை அவமானப்படுத்திவிட்டதாகவுமே அவர் கருதியுள்ளார்.

சிறுவனாக இருந்த இராமன் கூனியின் முதுகில், எறிந்த மண் உருண்டை அவனது முடிசூட்டலுக்குத் தடையாக இருந்ததுடன் தசரதனின் மரணத்திற்கும் காரணமாயிற்று. கூனியின் முதுகில் சிறுவனாக இருந்த இராமன் மண் உருண்டையை எறிந்தது தவறன்று, சிறுபிராயச்செயல் சிந்தித்துச் செய்வதல்லவே ஆகையால் மன்னிக்கப்பட வேண்டியது. அப்படியானால் தவறு - பிழை எங்குண்டெனில் தசரதனிடமே, ஏனெனில் மனம் பொறுப்பற்ற - வஞ்சக நெஞ்சுடைய கூனியை அரச மாளிகைக்குள்வைத்திருந்திருக்கக் கூடாது. இதனை செய்யாததனால் கூனியின் ஆலோசனை தசரதனை மாள வைத்தது.

இந் நிலைதான் ஜனாதிபதிசந்திரிகாவின் நிலையும். விரும்பியோ, விரும்பாமலோ சமாதானத்தை ஜனாபதி விரும்பினாலும் அவரது அரச சபையில் இருக்கும்பிரதமர் அதனை ஒரு போதும் விரும்பப் போவதில்லை. மாறாக ஜனாதிபதியின் முயற்சிக்கு எதிரான கருத்துக்களை அவர் தெரிவிப்பார் என்பது தெளிவு. ஆள் அறிந்து, இடமறிந்து, காலமறிந்து அவரவரை அந்தந்த இடத்தில் வைக்காமல்விட்டால் நிலைமை அந்தோகதிதான்என்பதை ஜனாதிபதி இப்போதாவது உணர்ந்திருப்பார்.

---

### ஏழைப் பிள்ளைகள் பிரபல கல்லூரிகளில்

# கற்பதைத் தடுப்பதற்காக பணக்கார வர்க்கம்

# கையாளும் சதித்திட்டமே ‘டொனேசன்”

**குருக்ஷேத்திரம்**

> யாழ்ப்பாணத்திலுள்ள தேசியக் கல்லூரி ஒன்று புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை தரம் 6 இல் அனுமதிப்பதற்கு ஆறாயிரம் ரூபா டொனேசன் கேட்கிறதாம்.
>
> திருநெல்வேலி சந்தையில் சிறுவியாபாரம் செய்யும் ஓர் ஏழைத்தந்தையிடமும் ஆறாயிரம் ரூபா கேட்கப்பட்டது. இதனைச் செலுத்த முடியாத தந்தை மகனை சிறிய பாடசாலை ஒன்றில் சேர்ப்பதென முடிவெடுத்தார்.
>
> இதனால் கவலையுற்ற மாணவன் கண்ணீர் விட்டு அழுதான் எல்லாக் கவலையும் ஒன்று சேர்ந்து தந்தைக்கு ஆத்திரமூட்டின அவர் என்ன செய்வார் புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த தனது மகனைக் கண்டபாட்டில் அடித்தார்.
>
> ஆறாயிரம் ரூபா கேட்பதில் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரும் ஒருவராம் எப்படி நம் புத்திஜீவிகளின் போக்கு இருக்கிறது தாம் எடுக்கும் சம்பளத்தை கணக்கில் கொண்டு எல்லோரையும் அப்படி எண்ணினால் ஏழைகளின் நெஞ்சல் கேட்காது மாறாக பணமில்லை என்றால் கேக் வாங்கலாமே என்றுதான் பதில்வரும். யாழ்ப்பாணத்தில் கல்லூரி டொனேசனும் அப்படித்தான்.

2001 ஆம் ஆண்டில் தரம் ஒன்று, தரம் ஆறுகளிற் கல்வி கற்பதற்கான அனுமதிகள் தற்போது பிரபல பாடசாலைகளில் தடல் புடலாக நடைபெறுகிறது. தெரிந்தவர் அறிந்தவரென்றசெல்வாக்குக் கலாசாரத்திற்கு உட்பட்ட அனுமதிகளை ஒதுக்கி வைத்துக் கொண்டு மிகுதியானவற்றுக்கு பேரம் பேசும் நிகழ்வுகள் நடந்து கொண்டிருக்கிறது.

பாடசாலைகளின்அபிவிருத்திச் சங்கம் பழையமாணவர் சங்கம் என்ற பதவிப் போர்வையால் சுற்றப்பட்ட சில உயர்ந்த பணக்கார வர்க்கம் ஓர் இடத்தில் உல்லாசமாக அமர்ந்திருக்கும் தமது பிள்ளைகளை பாடசாலைகளில் சேர்க்க வேண்டுமென்ற ஆவலில் பெற்றோர் பள்ளிக்கு வெளியில் காத்திருப்பர். ஒவ்வொருவரது பெயரும் வாசிக்கப்படும் உரியவர் கை கட்டி கால்கட்டி, அந்தகூட்டத்திற்குமுன் இருப்பர். உன்னை விட்டால்என்னுடைய அதிகாரத்தைநான் யாரிடம் காட்ட முடியும்என்ற பாணியில் ஆள் மாறி, ஆள் விளக்கம், விசாரணை உத்தியோகம், உறவுமுறை, நிதிவளம் என்றெல்லாம் கேள்விக்கணை தொடுப்பார்கள். முடிவில் தாம் தீர்மானித்து வைத்திருந்த டொனேசன் தொகையை அறிவிப்பார்கள். ஏழைப் பெற்றோர் என்னசெய்ய முடியும். கெஞ்சிக் கேட்டுப் பார்ப்பார்கள் ஆனால் அந்தக் கூட்டம அசையாது என்ன செய்வது புலமைப் பரீட்சையில் சித்தியடைந்து விட்ட தமது பிள்ளைச் செல்வத்தை எப்படியாவது ஒரு நல்ல பாடசாலையில் படிப்பிக்கவேண்டுமென்ற வாஞ்சையில் ஏழைப்பெற்றோர்கள் கடன் சுமைக்கு மேல் கடன் பட்டு ஏதோ ஒரு வழியில் அந்தத் தொகையினைச் செலுத்தி விடுகிறார்கள்.

இதனால்அக்குடும்பங்களின் ஏழ்மை மேலும வலுக்கிறது.

### கன்னங்கரா இன்றிருந்தால்

இலவசக் கல்வியின் தந்தையெனப் போற்றப்படும் சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்சரா இன்றிருந்தால். கொடுமையைக் கண்டு இரத்தக் கண்ணீர் வடித்திருப்பார்.

டொனேசன் என்ற போர்வையில் ஏழைப்பிள்ளைகளின் கல்விக்கு குழிவெட்டும் நாச வேலையை மனிதாபிமானமுள்ள எவரும் அனுமதிக்கமாட்டார்கள். இலவச சீருடை, இலவசப் பாடப் புத்புத்தகம் என்றெல்லாம் அரசாங்கம் கல்விக்காகப் பெருந்தொகையைச் செலவிடும் போது சில பிரகிருதிகள் மட்டும் டொனேசன்தொகையை அதிகரித்து ஏழைப்பிள்ளைகள் பிரபல பாடசாலைகளில் கற்பதை தடுத்து விடுகின்றனர்.

டொனேசன் செலுத்த வசதியற்ற பெற்றோர் தம்விருப்பத்தை நிறைவேற்ற முடியாமல் வேறு பாடசாலைகளில் சேர்த்த உண்மைகள் பல உண்டு எனினும் ஏழைகளாயிற்றே அதனால் அவ்வுண்மைகள் வெளிவர நியாயமில்லை அதுமட்டுமன்றி புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த ஏழைப்பிள்ளைகளின் பெற்றோர் தம்மிடம் டொனேசன் கொடுக்கப் பணமில்லை என்ற காரணத்திற்காக தேசிய பாடசாலைகளுக்கு விண்ணப்பிக்காமலே விட்டதுமுண்டு.

### ஏன் இந்த டொனேசன்

டொனேசன் வாங்கும் திட்டம் பாடசாலையின் உண்மையான அபிவிருத்திக்காக வேண்டப்பட்டதொன்றல்ல. அதற்காக அந்நிதி செலவிடப்படுவதுமில்லை அத்துடன் இந்நிதியைச் செலுத்திய பெற்றோருக்கு கணக்கு விபரங்கள் மருந்துக்கும் காட்டப்படுவதில்லை நிலைமை அப்படியிருந்து டொனேசன் பின்வரும் காரணங்களுக்காகவே வேண்டப்படுகிறது.

## கன்னங்கரா உயிருடன் இருந்தால் இரத்தக் கண்ணீர் வடித்திருப்பார்

★ டொனேசன் வாங்குவதில் பணம் படைத்த ஒரு குறிப்பிட்டவர்க்கமே ஈடுபடுகிறது. இவர்கள், தமது பிள்ளைகளுடன் சரி சமமக இருந்து ஏழைப்பிள்ளைகள் கற்பதை விரும்பவில்லை. ஏனெனில் பிரபலபாடசாலைகளில் பணம்படைத்த பதவி உயர்ந்தவர்களின் பிள்ளைகளை இணைத்துவிட்டால்; அதற்குள் ஒரு பணக்கார கலாசாரத்தை ஏற்படுத்திவிடலாம் அதன் மூலம் சமுதாயத்தில் ஓர் உயர்ந்த அந்தஸ்துடைய குடும்பப் பின்னணியை குறித்த கல்லூரிகளில் உருவாக்கி தமக்குத் தாமே பெருமையை சேர்த்துவிடுவது.

★ டொனேசன் வாங்குவதன் இரண்டாவது நோக்கம் உளமாயை (மேனியா) நோயுடன் தொடர்புடையது. சிலருக்கு இயல்பாகவே சிலரை - சிலவேலைகளை மேற்பார்வைசெய்ய விருப்பம். அதற்காக அவர்கள் எதனையும் செய்ய அஞ்ச - தயங்கமாட்டார்கள். இத்தகைய வர்க்கமே பதவிக்காக அலைவது. இவர்கள் டொனேசன் மூலம் அதிகளவு நிதியை வேண்டிவிட்டால் அக்கல்லூரிக்கு இவ்வளவு நிதியைச் சேர்த்துக் கொடுத்தேனென இறுமாப்புக் கொள்ளமுடியும். (நிதி எங்கிருந்து சேர்க்கப்பட்டதென்பதைக் கருத்தில்கொள்ளமாட்டார்கள்) அதன்மூலம் அக்கல்லூரியின் அதிபரின் செயற்பாடுகளிலும் தலையிட முடியும். அத்துடன் அக்கல்லூரியைத் தாமே இயக்குவதாகவும் பேசிக்கொள்ளலாம். இவையெல்லாவற்றிற்கும் மேலாக ஏழைகளின வயிற்றில் அடித்து டொனேசனை வாங்கிக் கொடுத்தால் அக்கல்லூரிகளில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளுக்குமான அழைப்பிதழ்களைப் பெற்றுக்கொள்ளமுடியும், இதற்காகவே டொனேசன் வாங்கப்படுகிறது.

### டொனேசனின் விளைவு என்ன?

பாடசாலை அனுமதிக்கு டொனேசன் வேண்டப்படுவதால் பாடசாலையுடனான தொடர்பை பெற்றோர்கள் முறித்துவிடுகின்றனர். இதனால் பாடசாலைகளில் நடைபெறும் கலை நிகழ்வுகள், சிரமதானப் பணிகள்போன்றவற்றில்பெற்றோர்கள் கலந்து கொள்வதில்லை. பாடசாலையின் அபிவிருத்திக்கு நிதி தேவையென்பதை மறுக்க முடியாது ஆனால் அந்நிதியை வசதிபடைத்த பெற்றோர்களிடம் உங்களால் முடிந்ததைத் தாருங்கள் எனக்கேட்டுப் பெறுவதே நீதி அவ்வாறு சேர்க்கப்படும் நிதி கட்டாயப்படுத்தி சேர்க்கும் நிதியைக் காட்டிலும் உயர்வாகக்கூட இருக்கலாம்.

கொழும்பு மாநகரப் பாடசாலைகளிலும் டொனேசன் வேண்டுகிறார்கள் என்று கூறுவதெல்லாம் போலிநியாயங்களே அங்குள்ள பெற்றோர்களின் வாழ்க்கைத் தரம், அவர்களின் தொழில் முயற்சிகளெல்லாம் இங்கு பொருந்தாதவை.

### அதிபர்கள் நீதியுடன் செயற்படவேண்டும்

கல்லூரி நிர்வாகத்தின் சகல அதிகாரமும் அதிபரின் கையிலேயேயுள்ளது. அதிபர்களென்போர் ஆசிரியர்களாக இருந்து வந்தவர்களே வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாட்டில் எத்தனையோ ஏழைமணவர்களை - அவர்களின் குடும்பப் பின்னணிகளை நேரில் கண்ட

**விதுரன்**

வர்கள் எனவே டொனேசன் என்பதற்கு அதிபர்கள் ஆதரவு வழங்கக்கூடாது என்பதுடன் பாடசாலை அனுமதி விடயத்தில் வெளியாரின் தலையீட்டையும், வெளியார் பெற்றோருக்கு நேர்முகப் பரீட்சை நடத்தும் துர்ப்பாக்கிய நிலையையும் தடுக்கவேண்டும்.

### பெற்றோரின் கடமை என்ன?

பாடசாலை அனுமதியின் போது டொனேசன் கேட்பது சட்டவிரோதமான செயல். இதனை வெறுமனே பார்த்திருந்தால் நிலைமை மேலும் மோசமடையும். இதனைத் தடுப்பதற்கு பெற்றோர் துணிவுடன் முனைப்புடன் செயலாற்றவேண்டும். டொனேசன் யார் கேட்கிறார்களோ அவர்கள் பற்றிய விபரங்களை உடனடியாக கல்வியமைச்சுக்கு அறிவிப்பதோடு உங்களிடம் டொனேசன் கேட்பவர் அரசசேவையிலுள்ளவராயின் அவரது செயற்பாடு குறித்து உடனடியாக அவர் கடமையாற்றும் திணைக்கள தலைவருக்கும் முறையிட வேண்டும். இதனை உடனடியாக செய்து முடிப்பது மிக மிக அவசியம்.

### கல்வித்திணைக்களம் கருணைகாட்டவேண்டும்

ஏழைகளிடம் டொனேசன் கேட்கும் கொடூரம் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு தெரியாததொன்றல்ல. எனவே யாழ்ப்பாணத்தில் உள்ள ஐந்து வலயக்கல்விப் பணிப்பாளர்கள்மற்றும் மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்கள் ஆகியோர் விரைவாக நடவடிக்கை எடுத்து டொனேசனை தடைசெய்து ஏழைப் பிள்ளைகளின் கல்விக்கு உதவ வேண்டும். இதுவே இன்றைய தேவை இதனை அவர்கள் செய்வார்களாயின் அது தமிழ்த்தேசத்திற்குச் செய்த உதவியாகும்.

---

# வலி. மேற்கு பிரதேச சபை விரைவில் குட்டி சிங்கப்பூர்

(யாழ்ப்பாணம்)

அடுத்த வருடத்திற்குள் வலி. தெற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியை குட்டி சிங்கப்பூர் ஆகமாற்றுவேன் என மேற்படி பிரதேச சபைத்தலைவர் ந. திரிலோகநாதன் தெரிவித்துள்ளார்.

சங்கானையில் அண்மையில் இடம்பெற்ற பஸ் நிலையத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு தலைமை உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்றைய நிலையில் எமக்கு எது கிடைக்கின்றதோ அவற்றை சிறுகச்சிறுக சேகரித்து எம்மை உயர்த்திக்கொள்ளவேண்டும்.

மக்களின் நடைமுறைச்சிக்கல்களை தீர்க்கும் வகையில் நமது செயற்பாடுகள் அமைய வேண்டியது அவசியம்.

எமது பிரதேச சபைக்குட்பட்ட பகுதியை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான நிதி உதவி குறித்து மேலிடத்திற்கு முறைப்பாடு செய்துள்ளேன் என்றார்.

# போதைப்பொருள் பாவனைக்கு இலங்கையில் 3லட்சம் பேர் அடிமை

இலங்கையில் போதைப் பொருள் பாவனையாளரின் எண்ணிக்கை 3 இலட்சத்தை எட்டி விட்டதென்ற அதிர்ச்சித் தகவலை இலங்கை போதைப் பொருள் தடுப்புச் சங்கம் வெளியிட்டுள்ளது.

போதைப் பொருட்களின் உபயோகத்தினால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றி இளைஞர், யுவதிகள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களுக்கு அறிவூட்ட மேற்படி சங்கம் ''இன்ரநெற்'' இணையம் மூலம் தகவல்களை வழங்கவுள்ளது.

இதே வேளை போதைப் பொருள் தடுப்பு சங்கத்தின் தகவலின்படி இலங்கையில் வருடாந்தம் 7 பில்லியன் ரூபா பெறுமதியான பொருட்களை உட்கொள்வதாகவும் ஒரு இலட்சம் பேர் ஹெரோயினுக்கும், இரண்டு இலட்சம் பேர் தனாஷ்ஸ் போதைப் பொருளுக்கும் அடிமையாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ந-2)

## குண்டு வெடித்ததில் ஒருவர் கொல்லப்பட்டார்

[ஏறாவூர்]

மட்டக்களப்பு செங்கலடியில் நேற்று முன் தினம் இரவு 11-30 மணியளவில்வீடொன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் ஈ.பி.டி.பியின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டார்.

சம்மாந்துறை வீரமுனையைச் சேர்ந்த பத்மநாதன் - ஜீவாகரன் [வயது 22] என்பவரே இவ்வாறு பலியானவராவார்.

இவர் மதுபோதையிலிருந்த வேளை இவரது இடுப்பில் கட்டப்பட்டிருந்த கைக்குண்டு கீழேவிழுந்து வெடித்திருக்குமென நம்பப்படுகிறது

பலியானவர் ஈ.பி.டி.பி இயக்கத்திலிருந்து சில வருடங்களுக்கு முன்னர் விலக்கப்பட்டதாக அந்த இயக்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட காரியாலயப்பொறுப்பாளர் ஏ. பிரதீபன் தெரிவித்தார்.

இதேவேளை இவரது சடலம் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. பொலிசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். [ஸ்ரீ-103]

## சுதந்திரக் கட்சியின் தலைவர் சந்திரிகா!

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக சந்திரிகா குமாரதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக்கூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டதென கட்சியின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான டி. எம். ஜெயரட்ண தெரிவித்தார்,

கடந்த நாற்பது வருடங்களாக ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கட்சியின் தலைவராக இருந்துள்ளதுடன் நாற்பது வருடங்களின் பின் புதிய தலைவராக சந்திரிகா குமாரதுங்க நியமிக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந - 5)

★ மட்டக்களப்பு மாவட்ட பாதுகாப்பு

## பத்து வருடங்களின் பின் அதிரடிப்படையினர் வசம்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டப் பாதுகாப்பு நடவடிக்கையினை கடந்த சனிக்கிழமை முதல் விஷேட அதிரடிப் படையினர் மீண்டும்பொறுப்பேற்றுள்ளனர்.

மட்டக்களப்பு நகரில் லேக் வீதியிலுள்ள இராணுவப் புலனாய்வு முகாம மற்றும் ஊறணி இராணுவ முகாம் என்பன அதிரடிப் படையினரால் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. ஆயினும் மட்டக்களப்பு நகரிலுள்ள 233 ஆவது பிரிவு இராணுவத் தலைமை அலுவலகம் மற்றும் கல்லடியிலுள்ள இராணுவ பயிற்சி முகாம் என்பன தொடர்ந்தும் இயங்கும் என தெரிவிக்கப்படுகிறது

1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற அனர்த்தச் சூழலினை அடுத்து மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து விஷேட அதிரடிப்படையினர் வாபஸ் பெறப்பட்டிருந்தனர் அதன் பின்னர் இராணுவம் முகாம்களை பெறுப்பேற்றிருந்தது எனினும் கடந்த சில ஆண்டு காலமாக ஆரையம்பதி மற்றும்களுவாஞ்சிக்குடிஆகிய இடங்களில் விஷேட அதிரடிப்படை முகாம்கள் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (108)

### புத்தூரில்--

இராணுவத்தினருக்கும் இடையே இடம்பெற்ற மோதலில் புலி உறுப்பினர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக விசேட ஊடகத்தகவல் நிலையம் அறிவித்துள்ளது,

மேற்படி சம்பவத்தில் உயிரிழந்தவரின் சடலம் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் ஊடாக கல்முனையில் வைத்து விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் மேலும் தெரிவித்துள்ளது, (ந-2)

### சந்திரசேகரன்

யையும், பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோரையும் சந்தித்து கைது செய்யப்படும் இளைஞர்களை அவசர காலச் சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டாம் என்றும், சாதாரண சட்டத்தின் கீழ் கைது செய்யுமாறும் கோரவுள்ளனர்.

இதேவேளைநீதி அமைச்சர் பட்டிவீரக் கோனையும் இவர்கள் சந்தித்துப் பேசவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## குருநகரில் சுவரொட்டிகள்

(யாழ்ப்பாணம்)

''தியாக சிந்தனையுடன் போராடுபவர்களை காட்டிக் கொடுத்தால் அதற்கான தண்டனையைப் பெறுவீர்கள்''

இவ்வாறான வாசகம் அடங்கிய சுவரொட்டிகள் குருநகர்ப் பகுதியில் ஒட்டப்பட்டிருக்கிறது.

இச்சுவரொட்டியின் இடது பக்க மூலையில் விடுதலைப் புலிகளின் சின்னமும் பொறிக்கப்பட்டிருப்பதாக தெரிய வருகிறது. (ஸ்ரீ)

### யுத்த--

பேசும் போதே மேஜர் ஜெனரல் பல்லேகல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் பேசி ஓர் தெளிவான உடன்பாட்டிற்கு வரும் வரை யுத்தம் தொடரப்படும்.

இரு தரப்பும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு யுத்த நிறுத்தம் அவசியமில்லை என்றும் கூறினார். (ந)

## ஒரேசூலில் 3குழந்தைகள்

(கொழும்பு)

மாத்தறை வைத்தியசாலையில் இளம் பெண்ணொருவர் மூன்று பெண் குழந்தைகளை ஒருசூலில் பிரசவித்துள்ளார்,

கடந்த வெள்ளிக்கிழமை சத்திரசிகிச்சைமூலம் பிறந்த இக்குழந்தைகள ஆரோக்கியமாக இருப்பதாக சத்திர சிகிச்சை நிபுணர் ஜே. எம். குமாரஸ்ரீ தெரிவித்துள்ளார்,

மாத்தறைப் பகுதியைச் சேர்ந்த மனோ நில்மினி (20 வயது) என்ற பெண்ணே இம்மூன்று குழந்தைகளையும் பிரசவித்தவராவார். (ந-5)

## ஏறாவூரில் சுற்றிவளைப்பு

(மட்டக்களப்பு)

ஏறாவூர் 5ம் குறிச்சியில் நேற்றுக் காலை பொலிசாரும இராணுவத்தினரும் மேற்கொண்ட சுற்றிவளைப்புத்தேடுதலில் சுமார் 50ற்கும் அதிகமானோர் சந்தேகத்தின பேரில் கைது செய்யப்பட்டு தீவிர விசாரணைக் குட்படுத்தியபின் விடுதலை செய்யப்பட்டனர்,

இவர்களின் கைது தொடர்பாக மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபாலி கேவகேயுடன் தொடர்பு கொண்டதையடுத்தே இவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். (-ஸ்ரீ)

### கட்டளை--

இராணுவ நடவடிக்கை முஸ்தீபுகளும் இராணுவ வட்டாரங்களில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றிவரும் மேஜர் ஜெனரல் நிஹால் மாரப்பன பட்டலந்த இராணுவ முகாமில் உள்ள பயிற்சிக் கல்லூரியின் தளபதியாகவும்,

முன்னேரியாவிலுள்ள 23 வது படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால பிரதிக்கட்டளையிடும் தளபதியாக யாழ்ப்பாணத்திற்கும் மாற்றம் செய்யப்படவுள்ளனர்.

கொத்தலாவலை பயிற்சிக் கல்லூரியின் தளபதியாக இருக்கும் நந்த மல்லவராச்சி 23வது பிரிவின் மின்னேரியா படைத்தளத்திற்கு மாற்றப்படவுள்ளார்.

இம்மூன்று மேஜர்ஜெனரல்களினது இடமாற்றங்களும் அடுத்தவாரம் இடம்பெறவுள்ளதாகவும் உயர் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த உயர்பீடமாற்றங்களின் பின் வடபகு யுத்த முனையில் பெரும்மாற்றங்கள் ஏற்படலாமென அரசியல், இராணுவ ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (வ)

★ திருமலை சீனன் குடாவில்

## மீன்பிடித்தடையை நீக்கி நஷ்டஈடு வழங்கவும்

(ஏறாவூர்)

திருகோணமலை சீனன் குடா கடற்பரப்பில் பாதுகாப்புத் தரப்பினரால் விதிக்கப்பட்டுள்ள மீன் பிடித் தடையினால் பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களுக்கு நஷ்டஈடு நிவாரணம் வழங்கப்பட வேண்டுமெனவும், மீன்பிடித் தடை உடனடியாக நீக்கப்பட வேண்டுமெனவும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

கடற்றொழில் நீரியல் வளபிரதியமைச்சர் முகைதீன் அப்துல் காதர் மற்றும் திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். தௌபீக் ஆகியோர் சமூக சேவைகள் அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சிடம் இக்கோரிக்கையினை முன் வைத்துள்ளனர்.

அண்மையில் திருமலைத் துறை முகத்தில் நிறுத்தப்பட்டிருந்த கடற்படைக் கப்பல் மீது புலிகள் நடத்திய தாக்குதலையடுத்து பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு குறிப்பிட்ட சில பிரதேசங்களில் மீன் பிடித்தடை அமுல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (108)

## பண்டாரவளைபடுகொலை 30பேருக்கு வலைவிரிப்பு

(கொழும்பு)

பண்டாரவளை பிந்துனுவெவவில் இடம் பெற்ற தமிழ் இளைஞர் படுகொலையுடன் தொடர்புடைய 30 பேரை தேடி இரகசிய பொலிஸார் வலைவிரித்துள்ளனர்.

மேற்படி படுகொலைகள் தொடர்பான விரிவான விசாரணைகளை நடத்தி வரும் இரகசியப்பொலிஸார்பல் வேறுதகவல்களின்அடிப்படையில் இவர்களைத் தேடி வருகின்றனர்.

எனினும்இவர்கள்தற்போது தலைமறைவு வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பதனால் கைது செய்வதில் பெரும் சிக்கல்கள் எழுந்திருக்கின்றன.

இதே சமயம் படுகொலைகளுடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஏற்கனவே 26 பேரைஇரகசிய பொலிஸார் கைது செய்திருப்பது குறிப்பிடத்தக்கது: (உ)

★ கடல் வலயச் சட்டத்தினால்

## கிளிநொச்சி மாவட்டத்தில் மீனவர்கள் பாதிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் கடல் வலயச் சட்டத்தினால் 4216 மீனவர்கள் தமது தொழிலை இழந்த நிலையில் மிகவும் கஷ்ரமான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்களெனத் தெரிவிக்கப்படுகிறது.

கடல்வலயச்சட்டத்தினால் சுமார் ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்:

இவர்களது மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டிருப்பதனால் பாரிய பொருளாதாரக் கஷ்டத்தை இவர்கள் எதிர் நோக்கியுள்ளதுடன் இவர்களுக்கு இதுவரை எந்த விதமான நிவாரணங்களும் வழங்கப்படவில்லை என்றும் புகார் செய்யப்பட்டுள்ளது. (ம)

## ஆணைக்குழு அமைக்க சட்டமூலம் நிறைவேற்றுக

(கொழும்பு)

சுதந்திர தேர்தல் ஆணைக்குழு அமைப்பதற்குரிய சட்டமூலம் பதினோராவது பாராளுமன்றத்தில் முதலாவது சட்டமூலமாக அறிமுகப் படுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு தேர்தலை சுதந்திரமாக நடத்தும் மக்கள் நடவடிக்கை முன்னணி சகல அரசியல் கட்சிகளுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தேர்தல் சுதந்திரமாகவும், நீதியாகவும் நடத்தப்பட வேண்டியதன் முக்கியத்துவம் பற்றி சகல அரசியல் கட்சிகள் மத்தியிலும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலமே சுதந்திர தேர்தல் ஆணைக்குழு அமைப்பதற்குரிய சட்டமூலத்தைபாராளுமன்றத்தில் நிறைவேற்ற முடியும், என்று மக்கள் நடவடிக்கை முன்னணியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கிங்சிலி றொற்றிக்கோ தெரிவித்தார்.

பணிப்பாளர் கிங்சிலி றொற்றிக்கோ மேலும் தெரிவிக்கையில், சுதந்திரதேர்தல் ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக்கட்சி, ஜே. வி. பி. ஆகியவற்றின் தலைவர்கள் உட்பட ஏனைய அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தைகள் விரைவில் நடத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (ந-2)

## விமானப்படையில் ஒருவர் பலி

திருமலை மொறாவெவ பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப்புலிகள் பதுங்கியிருந்து தாக்கியதில் விமானப்படைத்தரப்பில் ஒருவர் பலியானார்.

வீதிக்கண்காணிப்பில் ஈடுபட்ட விமானப் படையினர் முகா திரும்பும்போதே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. ]ந]

## நிதி உதவி

(வவுனியா)

வன்னிச்சிறார் பட்டினிச் சாவு ஒழிப்புத் திட்டத்தின் கீழ் 77௦0 சிறார்களும் தாய்மார்களும் பயனடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பட்டினிச்சாவு ஒழிப்புத் திட்டத்திற்கு சுமார் ஒரு கோடியே 80 லட்சம் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கு வெளிநாட்டு நிதியுதவி கிடைத்திருப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (ம)


ஸ்ரீசெல்வா
(யாழ்ப்பாணம்)
விஜய், சிம்ரன் நடித்த
ப்ரியமானவளே
10.30மட்டும்
கார்த்திக், மாளவிகா
நடித்த
சீனு
புதிய வெளியீடு
[கி-688] 2.30மட்டும்


இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும்விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம்ஆண்டு நவம்பர் மாதம் 13ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.